**கவனிக்க.-** *2016.02.05 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1954 - 2016 පෙබරවාරි මස 12 වැනි සිකුරාදා - 2016.02.12

*1954 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## *பகுதி IV(அ) - மாகாண சபைகள்*

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | 602 |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2016, மாச்சு மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, பெப்புருவரி மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யு. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# துணை விதிகள்

### மாவனல்லை பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 மற்றும் 126 ஆம் பிரிவுகளின் மூலம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாண சபையின் நிருவாக அதிகாரப் பிரதேசத்தின் மாவனல்லை பிரதேச சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள, கீழ்க்குறிப்பிடப்பட்ட துணைவிதி, பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாண சபையின் உள்ளூராட்சி விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சராகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டது என்பது இத்தால் பிரகடனம் செய்யப்படுகின்றது.*

*மஹீபால ஹேரத்,
உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்,
சப்பிரகமுவ மாகாணம்.*

*சப்பிரகமுவ மாகாண சபை அலுவலகம்,
மாவனல்லை,
2015, நவெம்பர் 26.*

### மாவனல்லை பிரதேச சபை - தகன நிலைய துணை விதி

*1. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 126 ஆம் இலக்க பிரிவினால் சபைக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களிற்கேற்ப இத்துணை விதிகள் மாவனல்லை பிரதேச சபையின் தகன நிலையத்தினை நடாத்துதல், ஒழுங்குமுறைப்படுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் கட்டணமறவிடல் பற்றிய துணை விதியென அறிமுகப்படுத்தப்படுகின்றது.*

*2. (அ) தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்ற எவரேனும் அலுவலரால் விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இன்றி மாவனல்லைப் பிரதேச சபைக்குச் சொந்தமான தகன நிலையத்தில் எந்தவோர் பூதவுடலையும் தகனம் செய்தல் ஆகாது.*

*(ஆ) இறந்துபோன எவரினதும் மரணம் சம்பந்தமாக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை சட்டத்தின் கீழ் நீதிவான் அல்லது திடீர் மரண பரிசோதகரால் விசாரணை நடாத்தப்பட்டு, அத்தகைய விசாரணையின் முடிவில் பூதவுடலைத் தகனம் செய்வதற்கு அத்தகைய நீதிவான் அல்லது திடீர் மரண பரிசோதகரால் அனுமதி அளிக்கப்பட்டிருந்தாலொழிய, அத்தகைய பூதவுடலை தகனம் செய்வதற்காகப் பொறுப்பேற்கவோ அல்லது தகனம் செய்வதற்கோ தவிசாளரால் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலரால் அனுமதிப்பத்திரம் விநியோகித்தல் ஆகாது.*

*3. (அ) பூதவுடலைத் தகனம் செய்வதற்கு அறவிடப்படும் கட்டணம் மாவனல்லை பிரதேச சபையின் பிரேரணை வழிமொழிதல் மூலமாக விதிக்கப்பட முடியுமென்பதோடு அவ்வாறான பிரேரணை வழிமொழிதல் மூலமாக காலத்திற்குக் காலம் திருத்தம் செய்ய முடியும்.*

*(ஆ) மேலே (அ) பந்தியின் கீழ் விதிக்கப்படுகின்ற அல்லது காலத்திற்குக் காலம் திருத்தம் செய்யப்படும் கட்டணங்கள், வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதோடு தகன நிலையத்தை ஒதுக்கிக்கொள்வதற்கான விண்ணப்பப்பத்திரங்களைப் பொறுப்பேற்கும் இடத்திலும் தகன நிலையத்திலும் தெளிவாகப் புலப்படக்கூடிய இடத்தில் காட்சிக்கு வைக்கப்படுதலும் வேண்டும்.*

*(இ) மாவனல்லை பிரதேச சபை தகன நிலையத்தில் பூதவுடலை தகனம் செய்வதற்கு எதிர்பார்க்கின்ற ஒவ்வொரு நபரும் இத்துணை விதியில் முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களைச் செலுத்தி அங்கீகாரம் பெறுதல் வேண்டும்.*

*(ஈ) சபையில் தற்போது பணியாற்றுகின்ற எவரேனும் ஒரு தவிசாளர், உதவித் தவிசாளர், சபை அங்கத்தவர் அல்லது சபையின் பணியாளரொருவரின், சபையில் முன்னர் பணியாற்றிய தவிசாளர், உதவித் தவிசாளர், சபை அங்கத்தவரொருவின் பூதவுடலொன்றைத் தகனம் செய்வதற்கு கட்டணங்கள் அறவிடப்படமாட்டாது.*

*(உ) பூதவுடலொன்றைத் தகனம் செய்வதற்காக தகன நிலையத்திற்கு ஒப்படைத்ததன் பின் தகனம் செய்யும்போது அல்லது தகனம் செய்வதற்கு முன் அல்லது தகன நிலைய இயந்திராதிகளில் இயந்திரக்கோளாறுகள் அல்லது மின் துண்டிப்பு ஏற்படுவதன் மூலம் பூதவுடலைத் தகனம் செய்வதற்கு இயலாது போகுமிடத்து குறித்த பூதவுடலை நல்லடக்கம் செய்வதனைத் தீர்மானிப்பதற்கான அதிகாரம் தவிசாளருக்குறியதாகும்.*

*4. இரண்டாவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் (இதனகத்துப்பின்னர் "விண்ணப்பதாரி" என அறியப்படும்) எவரேனும் ஆள், இங்கு கீழே காட்டப்பட்டுள்ள பதிவேட்டுடன் இங்கு இரண்டாவது அட்டவணைக்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரத்தை தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.*

*(அ) மரணமடைந்தவருக்கும் விண்ணப்பதாரிக்கும் இடையிலான தொடர்பினை உறுதி செய்துகொள்ளும் பொருட்டு.*

*(1) விண்ணப்பதாரியின் தேசிய அடையாள அட்டை அல்லது ;*
*(2) மரணமடைந்தவரின் தேசிய அடையாள அட்டை அல்லது ;*
*(3) விண்ணப்பதாரியின் திருமணச் சான்றிதழ் அல்லது ;*
*(3) மரணமடைந்தவர் வசித்த பிரிவின் கிராம அலுவலரால் வழங்கப்பட்ட சான்றிதழ்.*

*(ஆ) மரணமடைந்தவரின் மரணம் சம்பந்தமாக பிறப்பு மற்றும் மரணப் பதிவுச் சட்டத்தின் விதிகளின் பிரகாரம் திடீர் மரண விசாரணையாளர் மற்றும் பிறப்பு இறப்பு பதிவாளர்களினால் சான்றுப்படுத்தப்பட்டு பின்வரும் ஆவணங்கள் மூலம் முன்வைக்கப்படும் மரணங்கள் சம்பந்தமாக மட்டும் தகன நிலையம் ஒதுக்கப்பட முடியுமாக இருக்கும்.*

(i) B *18 - மரணப் பரிசோதகரின் சான்றிதழ் (39) (1) 41 (1) (உ) உறுப்புரை*
(ii) B *16 - மரண அறிவித்தல் சான்றிதழ் (41) (1) (அ) உறுப்புரை*
(iii) B *20 - மரணப் பதிவுச் சான்றிதழ் (42) (1) (ஆ) உறுப்புரை*
(iv) B *22 - இறந்தவரின் பிறப்புச் சான்றிதழ் (43) (1) (1) உறுப்புரை*

*5. பூதவுடலைத் தகனம் செய்வதற்கு அனுமதிப்பத்திரம் கோரி சமர்ப்பிக்கும் விண்ணப்பப்பத்திரத்தின் பேரில் அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்படின், அவ்வாறான விண்ணப்பப் பத்திரம் கிடைக்கப்பெறும் வரிசைக் கிரமத்திற்கமைய இங்கு 5 ஆம் அட்டவணைக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட பதிவேட்டில் பதிவு செய்தல் தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலரின் பணியாதல் வேண்டும் இப்பதிவேடு விண்ணப்பப்பத்திரங்களைப் பொறுப்பேற்கும் மாவனல்லை பிரதேச சபை அலுவலகத்தால் பேணப்படுதல் வேண்டும்.*

*6. சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரத்திற்கு அமைய ஏதேனும் பூதவுடல் தகனம் செய்வதற்குப் பொறுப்பேற்கத் தீர்மானிக்கப்படுமாயின், முதலாம் அட்டவணைக்கு ஏற்ப விதிக்கப்பட்ட உரிய கட்டணங்களை அறவிட்ட பின்னர், தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலரினால் அதற்காக இத்துணைவிதியின் நான்காம் அட்டவணைக்கேற்பத் தயாரிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தை விண்ணப்பதாரருக்கு வழங்குதல் வேண்டும். அத்தகைய அனுமதிப்பத்திரத்திற்கு அமைய தகனம் செய்வதற்குரிய பூதவுடல் தகன நிலைய பொறுப்பாளரிடம் கொண்டுவந்து பொறுப்பிக்க வேண்டிய தினம் மற்றும் நேரம் அத்தகைய அனுமதிப்பத்திரத்தில் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.*

*7. ஏதேனும் காரணத்தின் பேரில் தகனம் செய்வதற்காக பூதவுடலைப் பொறுப்பேற்காவிடின், தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலர் அதற்கேதுவாக அமைந்த காரணங்களுடன் அதுபற்றி உடனடியாக விண்ணப்பதாரருக்கு எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும்.*

*8. தகன நிலையத்தில் தகனம் செய்வதற்காக பூதவுடல்களைப் பொறுப்பேற்றல் வாரத்தின் எல்லா நாட்களிலும் முற்பகல் 6.00 மணியிலிருந்து பிற்பகல் 7.00 மணி வரையான கால எல்லையினுள் இருத்தல் வேண்டும்.*

*9. வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள நேரத்தில் அல்லது அதற்கு முன்னர் பூதவுடலை தகன நிலைய பொறுப்பாளரிடம் கையளித்தல் வேண்டும். அத்தகைய நேரத்தில் பூதவுடலைக் கையளிக்க தாமதம் காரணமாக விண்ணப்பதாரி அல்லது மரணமடைந்தவரின் உரிமையுள்ள வேறு எவரேனும் ஆளுக்கு ஏற்படும் ஏதேனும் வசதியீனம் அல்லது நட்டம் சம்பந்தமாக மாவனல்லை பிரதேச சபைத் தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலர் வகைப்பொறுப்புக்கு கட்டுப்படல் ஆகாது.*

*10. தகன நிலையத்தில் தகனம் செய்யப்பட்ட ஒவ்வொரு பூதவுடல் தொடர்பாக இத்துணை விதியின் ஆறாவது அட்டவணைக்கு அமைவாக விபரங்கள் ஒன்றுசேர்க்கப்பட்ட பதிவேடொன்று தகன நிலையத்தின் பொறுப்பாளரால் பேணப்பட்டுவருதல் வேண்டும்.*

*11. (அ) ஒவ்வொரு பூதவுடலும் தகனம் செய்யப்பட்டு எழுபத்திரண்டு மணித்தியாலங்கள் கழிவதற்கு முன்னர் விண்ணப்பதாரியால் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவரால் குறித்த பூதவுடலின் அஸ்தி பொறுப்பேற்கப்படல் வேண்டும்.*

*(ஆ) பூதவுடலை தகனம் செய்வதற்காக தகன நிலையத்தை ஒதுக்கிக் கொள்ளும்போது பூதவுடலைத் தகனம் செய்ததன் பின் அஸ்தியை பாதுகாப்பாக வைப்பதற்காக மரணித்தவரின் பெயர் மற்றும் முகவரி எழுதப்பட்ட பாத்திரமொன்றினை (இறுக்கமாக மூடியை மூடக்கூடிய) மரணித்தவரின் நெருங்கிய உறவினர்களால் தகனசாலைப் பொறுப்பாளருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.*

*(இ) தகன நிலையத்திலிருந்து அகற்றப்படுகின்ற அஸ்தியை மரணித்தவரின் நெருக்கமான ஒரு உறவினருக்கன்றி ஒப்படைத்தல் கூடாது.*

*(ஈ) அவ்வாறிருந்தும் விண்ணப்பதாரியின் எழுத்துமூலமான வேண்டுகோளுக்கிணங்க தவிசாளரின் அதிகாரம் பெற்ற அலுவலர் குறித்த அஸ்தியினை தகன நிலையப் பொறுப்பாளரின் பொறுப்பில் வைத்துக் கொள்ளும் கால எல்லையை நீடிக்கலாம்.*

*(உ) (ஆ) பந்தியின் கீழ் அஸ்தி தகன நிலைய பொறுப்பாளரின் பொறுப்பில் வைத்திருப்பதற்கு நீடிக்கப்பட்ட காலம், தகனம் செய்யப்பட்ட தினத்திலிருந்து இரு வாரங்களை விஞ்சாதிருத்தல் வேண்டும்.*

*(ஊ) அவ்வாறு அஸ்தி அப்புறப்படுத்துவதற்கு வழங்கப்பட்ட காலம் முடிவுற்ற பின்னரும் எடுத்துச் செல்லப்படாத அஸ்தியை அகற்றுவதற்கு மாவனல்லை பிரதேச சபை தவிசாளர் அல்லது தகன நிலைய பொறுப்பாளருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.*

(எ) எவரேனும் விண்ணப்பதாரியால் அல்லது அவருடைய அதிகாரம் பெற்ற பிரதிநிதியால் பொறுப்பேற்கப்படாத அஸ்தியை தகன நிலைய வளவினுள் அல்லது ஏதேனும் மயானத்தில் புதைப்பதற்கான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல் மாவனல்லை பிரதேச சபை தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலரின் பணியாதல் வேண்டும்.

(ஏ) தகன நிலையத்திலிருந்து அகற்றப்படுகின்ற அஸ்தியினை 11 (ஆ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின்படி ஒப்படைக்கப்பட்டுள்ள பாத்திரத்தில் இட்டு கவனமாக நிமித்த வேலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில் அல்லது கூடத்தில் தகன நிலைய பொறுப்பாளரினால் வைக்கப்படுதல் வேண்டும்.

12. (அ) ஏதேனும் தகன நிலையத்தின், தகன கூடத்தில் சடலம் வைக்கப்பட்டு அதன் பாதுகாப்பு கதவுகள் மூடப்பட்ட பின்னர் கூடத்தின் மூடப்பட்ட பகுதிக்கு ஒதுக்கப்பட்டுள்ள பாகத்தினுள் தகன நிலைய பொறுப்பாளர் அல்லது அவரின் உதவியாளர் தவிர்ந்த வேறு எவரேனும் ஆளும் உட்பிரவேசித்தல் ஆகாது.

(ஆ) தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலர் அல்லது தகன நிலைய பொறுப்பாளரின் அனுமதியின்றி எவரும் தகன நிலைய வளவினுள் பிரவேசித்தல் ஆகாது.

(இ) (ஆ) பந்தியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும்,-

(i) பூதவுடலைத் தகனம் செய்வதற்கு எவரேனும் ஒரு நபர் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுள்ளவிடத்து பூதவுடலைத் தகனம் செய்வதற்காக கையளிப்பதற்கு அவர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற ஆளுடன் அத்தகைய சந்தர்ப்பத்தில் பங்குகொள்ளும் வேறு எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் மற்றும்.

(ii) தகனம் செய்யப்பட்ட ஏதேனும் பூதவுடலின் அஸ்தியைப் பொறுப்பேற்க உரிய தினம் அல்லது அத்தினத்திற்கு முன்னர், அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுள்ளவர் அல்லது அவரின் பிரதிநிதியுடன் வருகைதரும் வேறு எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் தகன நிலைய வளவினுள் பிரவேசிப்பதற்கு அனுமதியைப் பெற்றுக்கொண்டுள்ள ஆட்களும் எனக் கருதப்படல் வேண்டும்.

(ஈ) இத்துணை விதியினை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படுகின்ற எவையேனும் பிரச்சினையொன்றின் போது தவிசாளரின் தீர்மானம் இறுதித் தீர்மானம் ஆகும். இத்துணை விதியினை மீறும் சந்தர்ப்பத்தில் அதற்காக தகுந்த அதிகாரமுள்ள நீதிமன்றமொன்றின் மூலம் குற்றவாளியாக்கப்பட்டதன் பின் ரூபா எழுநூற்றி ஐம்பதிற்கு மேற்படாத தண்டத்திற்கு உட்படுதல் வேண்டும். மேலும் தொடர்ந்தும் குறித்த தவறிற்காக குற்றவாளியாக்கப்பட்டால் குறித்த தவறைப் புரிகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கும் ஒரு நாளைக்கு ரூபா 250 இற்கு மேற்படாத தண்டத்திற்கும் குறித்த நபர் உட்படுதல் வேண்டும்.

13. ஏதேனும் தகன நிலைய வளவினுள்.-

(அ) அமைதியைக் குலைக்கும் விதத்தில் நடந்துகொள்ளல்

(ஆ) தகன நிலைய வளவினுள் உள்ள மாவனல்லை பிரதேச சபைக்குச் சொந்தமான ஆதனங்களுக்கு சேதமேற்படுத்தல் அல்லது அவ்வாறு செய்வதற்கு முற்படுதல்.

(இ) தகன நிலையத்தின் பொறுப்பாளரின் அல்லது அவருடைய எவரேனும் உதவியாளரின் கடமைகளுக்குத் தடை ஏற்படுத்தல்.

(ஈ) தகன நிலைய வளவிற்குள் ஏதேனும் அலங்கரிப்புகளைச் செய்தல் அல்லது அறிவித்தல்களை ஒட்டுதல் ஆகாது.

(உ) தகன நிலையத்தினை ஒதுக்கீடு செய்கின்ற ஒருவரினால் ஏதேனும் ஒரு சொத்திற்கு அல்லது கட்டடமொன்றிற்கு அல்லது உபகரணத்திற்கு நட்டமொன்று ஏற்படுத்தப்பட்டால் தவிசாளர் விதிக்கின்ற மதிப்பீட்டுப் பெறுமதியினைச் செலுத்துவதற்கு தகன நிலையத்தினை ஒதுக்கீடு செய்பவர் ஒப்புக்கொள்ளுதல் வேண்டும்.

14. (அ) பூதவுடலை அடக்கம் செய்வதற்கு உகந்த நிலையில் தகனநிலையத்தைப் பராமரித்துக் கொண்டு நடாத்துதலும் மாவனல்லை பிரதேச சபை தவிசாளர் பணியாதல் வேண்டும்.

(ஆ) ஏதேனும் தகன நிலையத்தின் புனரமைப்பு அல்லது பராமரிப்பு கருமத்திற்காக அத்தகைய தகன நிலையத்தை மூடிவைப்பதாயின், அது பற்றிய அறிவித்தலொன்றை மூன்று மொழிகளிலும், பூதவுடல்கள் தகனம் செய்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் அலுவலகத்திலும் தகன நிலைய வளவினுள் பிரவேசிக்கும் இடத்திலும் தெளிவாகப் புலப்படக்கூடிய விதத்தில் காட்சிக்கு வைத்தல் மாவனல்லை பிரதேச சபை தவிசாளர் பணியாதல் வேண்டும்.

15. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயொழிய இப்பகுதிக்கான துணைவிதிகளில்.-

'தகனநிலைய கூடம்' என்பது, தகனம் செய்வதற்காக பூதவுடல் வைக்கப்படுகின்ற கூடமும் அத்தகைய கூடத்திற்கு வெளியே அமைக்கப்பட்டுள்ள வெளிக்கூடமும்

'தகன நிலைய வளவு' என்பது, முழு தகன நிலையமும் அதற்குச் சொந்தமான பூமியும்

'தகன நிலையத்தின் பொறுப்பாளி' என்பது அப்போதைக்கு மாவனல்லை பிரதேச சபையின் தகன நிலையத்திற்கும் அதன் நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக இருப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள எவரேனும் ஊழியர்.

'அஸ்தி' என்பது ஏதேனும் பூதவுடல் தகனம் செய்யப்பட்ட பின்னர் பூதவுடலினதும் அது வைக்கப்பட்ட பெட்டியில் ஏதேனும் எரியாது எஞ்சிய பொருட்களும்

"பூதவுடல்" என்பது மரணமடைந்த எவரேனும் ஆளுடைய முழு பூதவுடல் அல்லது உயிரற்றுப் பிறந்த குழந்தையின் பூதவுடலும் அல்லது பூதவுடலின் ஏதேனும் பாகமும் கருதப்படல் வேண்டும்.

"தவிசாளர்" என்பவர், குறிப்பிட்ட பிரதேச சபையின் தவிசாளர் ஆவார்.

"அதிகாரம் பெற்ற அலுவலர்" என்பவர் தவிசாளரின் எழுத்து மூலமாக அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ள, அச்சபையின் எவரேனும் அதிகாரி ஒருவர் அல்லது ஊழியர் ஒருவர் எனவும் பொருள்படும்.

16. இத்துணை விதியில் தமிழ் மற்றும் ஆங்கிலப் பிரதிகளில் பொருத்தமற்ற ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் சிங்களப் பிரதி வலுவுள்ளதாய் இருத்தல் வேண்டும்.

**முதலாவது அட்டவணை**

**தகன நிலையத்தைப் பாவிக்கும் போது அறவிடப்படுகின்ற கட்டணங்கள்**

| | | ரூபா ச. |
|---|---|---|
| 01. | அதிகாரப் பிரதேசத்தில் வதியும் ஒருவரின் பூதவுடலைத் தகனம் செய்வதற்கு | 6,000.00 |
| 02. | அதிகாரப் பிரதேசத்திற்கு வெளியே வதியும் ஒருவரின் பூதவுடலைத் தகனம் செய்வதற்கு | 7,000.00 |

**இரண்டாவது அட்டவணை**

(இரண்டு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும்)

**மாவனல்லை பிரதேச சபையின் தகன நிலையத்தில் பூதவுடலொன்றைத் தகனம் செய்வதற்கு அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பம்**

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :-----.
முகவரி :-----.
தொலைபேசி இல. :-----.
கிராம அலுவலர் பிரிவின் இலக்கமும் பெயரும் :-----.
தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

2. மரணமடைந்தவரின் முழுப் பெயர் :-----.
ஆண்/பெண் ? :-----.
வசித்திருந்த இடத்தின் முகவரி :-----.
கிராம அலுவலர் பிரிவின் இலக்கமும் பெயரும் :-----.
தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.

3. மரணமடைந்தவருக்கும் விண்ணப்பதாரருக்கும் உள்ள தொடர்பு :-----.
(உறுதிப்படுத்துவதற்கு 4 ஆவது துணைவிதியின் (அ) பந்தியில் குறிப்பிட்ட சான்றிதழ்களை இணைக்கவும்)
அவைகளாவன :
விண்ணப்பதாரியின் அடையாள அட்டை, நிழற் படப்பிரதி அல்லது மரணித்தவரின் அடையாள அட்டை பிரதி அல்லது மரணித்தவர் வசித்திருந்த கிராம அதிகாரப் பிரிவு கிராம அதிகாரியினால் வழங்கப்பட்ட சான்றிதழின் பிரதி
4. மரணத்திற்கான காரணம் :-----.
(உறுதிப்படுத்துவதற்கு 4ஆவது துணை விதியின் (ஆ) பந்தியில் குறிப்பிட்ட சான்றிதழ் ஒன்றை இணைக்கவும் B 18 - மரணப் பரிசோதகரின் சான்றிதழ் அல்லது B 16 - மரண அறிவித்தல் சான்றிதழ் அல்லது B 20 - மரணப் பதிவுச் சான்றிதழ் அல்லது B 22 - மரணித்தவரின் பிறப்பு அத்தாட்சிச் சான்றிதழ்
5. தகனம் செய்வதற்குக் கோரும் தினமும் நேரமும் :-----.
(விருப்பு ஒழுங்கு முறைப்படி)

| திகதி | நேரம் | திகதி | நேரம் |
|---|---|---|---|
| (i) 20 .............. | ..................... மணி | (iii) 20 .............. | ..................... மணி |
| (ii) 20 .............. | ..................... மணி | (iv) 20 .............. | ..................... மணி |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் உறுதிப்படுத்துகிறேன். மேலும் இங்கு காட்டப்பட்டுள்ள தகவல்களின் முழுப் பொறுப்பையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். ஏற்புடைய சான்றிதழ்கள் இணைக்கப்பட்டுள்ளன.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : -----.

**மூன்றாம் அட்டவணை**

திரு./திருமதி/செல்வி :
............................................
............................................

**பூதவுடலைத் தகனம் செய்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதை நிராகரித்தல்**

உங்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள (மறுபக்கத்தில்) விண்ணப்பப்பத்திரத்தின் பிரகாரம், கீழே காட்டப்பட்டுள்ள காரணங்களின் நிமித்தம், அனுமதி நிராகரிக்கப்படுவதாக கவலையுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(i) ............................................... .
(ii) ............................................... .
(iii) ............................................... .
(iv) ............................................... .

----,
தவிசாளர்/அதிகாரம் பெற்ற
அலுவலரின் கையொப்பம்,
மாவனல்லை பிரதேச சபை.

திகதி : -----.

**நான்காம் அட்டவணை**

தகன நிலையப் பொறுப்பதிகாரி,
மாவனல்லை பிரதேச சபை,
தகன நிலையம்.

**சடலத்தை தகனம் செய்வதற்கு வழங்கப்படும் அனுமதிப்பத்திரம்**

(அ) ............................................ என்பவரின் பூதவுடலை 20 ..... ஆண்டு ................... மாதம் ............ ஆந் திகதி முற்பகல்/பிற்பகல் ............ மணிக்கு மாவனல்லை தகன நிலையத்தில் தகனம் செய்வதற்கு இத்தால் அனுமதி வழங்குகிறேன்.

(ஆ) 20 ............ ............... .............. திகதிய ......... இலக்கத்தைக் கொண்ட பற்றுச்சீட்டின் மூலம் ரூ.................. அறவிடப்பட்டுள்ளது.

(இ) இவ்வனுமதிப்பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள தகவல்களைச் சார்ந்ததாக 10 ஆவது துணைவிதியின் பிரகாரம் ஏற்புடைய பதிவேட்டில் பதிந்த பின்னர் பூதவுடலைத் தகனம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவும்.

(ஈ) அனுமதிப்பத்திரம் பதிவேட்டின் தொடர் இலக்கம் ................ ஆகும்.

----,
தவிசாளர்/அதிகாரம் பெற்ற
அலுவலரின் கையொப்பம்.
மாவனல்லை பிரதேச சபை.

திகதி : -----.

## ஐந்தாம் அட்டவணை

**மாவனல்லை பிரதேச சபையின் தகன நிலையத்தில் பூதவுடலை தகனம் செய்வதற்கு வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திர இடாப்பு**

**(அலுவலகத்தில் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.)**

| தொடர் இலக்கம் | திகதி | விண்ணப்பதாரியின் பெயர், முகவரி | விண்ணப்பதாரியின் தொ. பே. இல. | விண்ணப்ப இலக்கம் | பற்றுச்சீட்டு இல. | தொகை (பணம்) | பணம் செலுத்திய திகதி | இறந்தவர் பெயர், முகவரி | தகனம் செய்யும் திகதி | நேரம் | அனுமதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | | | |
| 2 | | | | | | | | | | | |
| 3 | | | | | | | | | | | |
| 4 | | | | | | | | | | | |
| 5 | | | | | | | | | | | |

## ஆறாம் அட்டவணை

**மாவனல்லை பிரதேச சபையின் தகன நிலையத்தில் தகனம் செய்யப்பட்ட பூதவுடல்கள் பற்றிய இடாப்பு**

**(தகன நிலைய பொறுப்பாளியினால் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.)**

| தொடர் இலக்கம் | இறந்தவரின் பெயர், முகவரி | ஆண்/பெண் | அனுமதி இடாப்பில் தொடர் இல. | தகனம் செய்யப்பட்ட | | அஸ்தியைக் கொண்டு சென்ற திகதி |
|---|---|---|---|---|---|---|
| | | | | திகதி | நேரம் | |
| 1 | | | | | | |
| 2 | | | | | | |
| 3 | | | | | | |
| 4 | | | | | | |
| 5 | | | | | | |
| 6 | | | | | | |

**ருவன்வெல்ல பிரதேச சபை**

துணை விதிகள்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 மற்றும் 126 ஆம் பிரிவுகளின் மூலம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாண சபையின் நிருவாக அதிகாரப் பிரதேசத்தின் ருவன்வெல்ல பிரதேச சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள, கீழ்க்குறிப்பிடப்பட்ட துணைவிதி, பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சராகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டது என்பது இத்தால் பிரகடனம் செய்யப்படுகின்றது.*

*மஹீபால ஹேரத்,*
*உள்ளூராட்சி விடயங்களுக்கப் பொறுப்பான அமைச்சர்,*
*சப்பிரகமுவ மாகாணம்.*

*சப்பிரகமுவ மாகாண சபை அலுவலகம்,*
*மாவனல்லை,*
*2015, நவெம்பர் 26.*

**மயான பூமி பற்றிய துணை விதிகள்**

*1. இத்துணை விதி ருவன்வெல்லை பிரதேச சபை அதிகார எல்லையில் பொது மயான பூமிகளில் பூதவுடல்களை நல்லடக்கம் செய்தலை, கல்லறைகளில் வைத்தலை ஒழுங்குமுறைப்படுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் பற்றிய துணைவிதிகளென எடுத்துக்காட்டப்படும்.*

*2. ருவன்வெல்லை பிரதெச சபைக்கு உரித்தான ஏதேனும் மயான பூமியொன்றினை உபயோகிப்பதற்காக அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கின்ற எவரேனும் ஒரு நபர் இப்பிரிவின் துணைவிதிகளில் முதலாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கு ஏற்பத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவமொன்றினை முன்வைத்தல் வேண்டும்.*

*3. இறந்துபோன எவரினதும் மரணம் சம்பந்தமாக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை சட்டத்தின் கீழ் நீதவான் அல்லது திடீர் மரண பரிசோதகரால் விசாரணை நடாத்தப்பட்டு, அத்தகைய விசாரணையின் முடிவில் பூதவுடலை தகனம் செய்வதற்கு அத்தகைய நீதவான் அல்லது திடீர் மரண பரிசோதகர் அனுமதி அளிக்கப்பட்டிருந்தாலேயொழிய, அத்தகைய பூதவுடலை தகனம் செய்வதற்காகப் பொறுப்பேற்கவோ அல்லது தகனம் செய்வதற்கு அனுமதிப்பத்திரமொன்றை வழங்கவோ ருவன்வெல்ல பிரதேச சபை தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலரால் செய்தல் ஆகாது.*

*4. 2 ஆம் துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விண்ணப்பப்படிவமொன்றை கையளிக்கின்ற எவருக்கும் ருவன்வெல்லப் பிரதேச சபைக்கு உரித்தான ஏதேனும் மயான பூமியொன்றினை உபயோகிக்கப்பதற்காக அனுமதிப்பத்திரமொன்றினை வழங்கும் போது இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் பூர்த்திசெய்யப்பட்டாலன்றி தவிசாளரினால் அனுமதிப்பத்திரமொன்றை வழங்குதல் ஆகாது.*

*(அ) மயான பூமியை உபயோகிப்பதற்கான அனுமதிப்பத்திரமொன்றை வேண்டுகின்ற அனைத்து விண்ணப்பப்படிவங்களும் ருவன்வெல்ல பிரதேச சபைக்குக் கிடைக்கின்ற ஒழுங்குமுறைக்கேற்ப பட்டியல்படுத்தப்படுவதோடு நல்லடக்கம் செய்தல் மற்றும் கல்லறைகளில் வைத்தல் சம்பந்தமாக கருத்தில் கொல்லப்படுதல் வேண்டும்.*

*(ஆ) இங்கு இரண்டாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக் கட்டண முறைக்கேற்ப ருவன்வெல்ல பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற முறைக்கு ஏற்ப மயான பூமியை ஒதுக்கீடு செய்து கொள்ளும் கட்டணங்கள் மற்றும் வைப்புப் பணம் செலுத்தப்பட்டதன் பின் மாத்திரம் அனுமதிப்பத்திரம் வழங்கப்படுதல் வேண்டும்.*

*5. உபயோகிப்பதற்காக மயான பூமியினை ஒதுக்கிக் கொள்வதற்கு விண்ணப்பப்படிவமொன்றை ஒப்படைத்தல், குறித்த ஒதுக்கீடு எதிர்பார்க்கப்படுகின்ற தினத்திற்கு குறைந்தபட்சம் 24 மணித்தியாலங்களுக்கு முன் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். எவரேனும் ஒருவரினால் வேண்டப்படுகின்ற விண்ணப்பம் மயான பூமியை ஒதுக்கிக் கொள்வதற்கு தேவையான தினத்திற்கு, இரு நாட்களுக்கு முன் எச்சந்தர்ப்பத்திலாவது முன்வைக்க முடியும் என்பதோடு குறித்த வேண்டுகோலிற்கிணங்க மேற்கொள்ளப்படுகின்ற ஒதுக்கீடு 12 ஆம் துணைவிதியின் ஏற்பாடுகளுக்கு உட்படுதல் வேண்டும்.*

*6. ஒதுக்கீடு செய்ததை இரத்துச் செய்வதற்காக வேண்டப்படுகின்ற சந்தர்ப்பத்தில் ஒதுக்கீடு செய்ததை இரத்துச் செய்தாலும், ஒதுக்கீடு செய்து கொள்வதற்காக வைப்பிலிடப்பட்ட தொகையினை மீளச் செலுத்துதல் சட்டபூர்வமற்றதாகும்.*

*7. எவரேனும் ஒரு நபரினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட மயான பூமியினை ஒதுக்கீடு செய்து கொண்ட பணிக்கு அல்லாத வேறு எந்தப் பணிக்கும் ஈடுபடுத்தல் கூடாது.*

*8.* மயான பூமியொன்றினை ஒதுக்கீடு செய்து கொள்வதற்காக வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரமொன்றை எக்காரணம் கொண்டும் வேறு ஒரு நபருக்கு சாட்டுதல் கூடாது.

*9.* எவரேனும் ஒரு நபரினால் மயான பூமியொன்றினை ஒதுக்கீடு செய்து கொள்வதற்காக மேற்கொள்ளப்படுகின்ற வேண்கோலொன்றிற்கு இடம் வழங்கப்படாத சந்தர்ப்பமொன்றில் அவ்வாறு இடம் வழங்கப்படாததற்கான சந்தர்ப்பமொன்றில் அவ்வாறு இடம் வழங்கப்படாததற்கான காரணங்களைக் குறிப்பிட்ட இது விடயமாக விண்ணப்பப்படிவம் முன்வைக்கப்பட்ட திகதியிலேயே குறித்த விண்ணப்பதாரிக்கு எழுத்து மூலம் அறிவித்தல் செய்வது தவிசாளரின் பணியாகும்.

*10.* மயான பூமியொன்று நல்லடக்கம் செய்வதற்காக அல்லது கல்லறையில் வைப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட திகதியினை மாற்றிக் கொள்வதற்குத் தேவைப்படின் விண்ணப்பதாரரால் அது விடயமாக எழுத்துமூலமாக அல்லது நல்லடக்கம் செய்தல் அல்லது கல்லறையில் வைத்தலை மாற்றிக்கொள்ளத் தேவையெனின் விண்ணப்பதாரியினால் அதுபற்றி எழுத்துமூலமாக தவிசாளருக்கு வேண்டுகோலொன்றை விடுக்கலாம். குறித்த வேண்டுகோலின்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட திகதியில் திருத்தங்களை செய்தல் 2 ஆம் மற்றும் 3 ஆம் துணை விதிகளின் விதிப்புரைகளுக்கு அமைய மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

*11.* சபைக்குச் சொந்தமான ஒரு மயான பூமியில் ஒரு நாளைக்கு எந்த எண்ணிக்கையிலான பூதவுடல்களையும் நல்லடக்கம் அல்லது கல்லறையில் வைத்தலை மேற்கொள்ளலாம்.

*12.* சபைக்குச் சொந்தமான மயான பூமியில் நல்லடக்கம் செய்தல் அல்லது கல்லறையில் வைத்ததன் பின் ருவன்வெல்ல பிரதேச சபையில் வைப்பிலிட்ட வைப்புப் பணத்தில்–

(அ) மயான பூமிக்கு அல்லது அதன் ஏதேனும் ஒரு பகுதிக்கு ஏற்பட்டுள்ள ஏதேனும் சேதங்கள் இருப்பின் குறித்த நட்டத்தின் பெறுமதியை; மற்றும்

(ஆ) மயான பூமியினை ஒதுக்கிய காலஎல்லையைவிட மேலதிகமாக எடுக்கப்படுகின்ற காலத்திற்காக அறவிடப்படவேண்டிய கட்டணத்தினை

அறவிட்டதன் பின் எஞ்சுகின்ற ஏதேனும் ஒரு தொகையை மாத்திரம் விண்ணப்பதாரருக்கு மீளச் செலுத்தலாம்.

*13.* எவரேனும் ஒரு நபரினால் ருவன்வெல்ல பிரதேச சபைக்குச் சொந்தமான ஏதேனும் மயான பூமிக்கு சேதம் விளைவித்தலோ அவ்வாறு சேதமடைய இடமளித்தலோ ஆகாது. அத்துடன் மயான பூமிக்கு மாடுகள், ஆடுகள், பன்றிகள், குதிரைகள், மட்டக்குதிரைகள், கோவேறு கழுதைகள் அல்லது நாய்களை உள்ளே கொண்டு செல்லுதல் அனுமதிக்கப்படலாகாது. அவ்வாறே ருவன்வெல்ல பிரதேச சபை தவிசாளரிடம் பெறப்பட்ட அனுமதியின்றி எந்தவொரு வாகனத்தையும் எந்தவொரு மயான பூமிக்குள்ளும் உள்ளே கொண்டு செல்லுதல் கூடாது.

*14.* ருவன்வெல்ல பிரதேச சபை எல்லைக்கு உரித்தான எந்தவொரு அரச வைத்தியசாலையிலிருந்தும் வழங்கப்படுகின்ற உரிமையாளர் ஒருவர் அல்லது பொறுப்பாளர் ஒருவர் இல்லாத பூதவுடலை ருவன்வெல்ல பிரதேச சபைக்கு உரித்தான மயான பூமியொன்றில் சபையின் செலவில் நல்லடக்கம் செய்யலாம்.

*15.* ருவன்வெல்ல பிரதேச சபை எல்லைக்குள் வறுமையில் வாடுகின்ற எவரேனும் ஒரு நபரின் சவமொன்றினை ருவன்வெல்ல பிரதேச செயலாளர் ஊடாக முன்வைக்கப்படுகின்ற வறுமையினை உறுதிப்படுத்துகின்ற ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு ருவன்வெல்ல பிரதேச சபைக்கு உரித்தான எவையேனும் மயான பூமியில் எவ்விதக் கட்டணமும் இன்றி நல்லடக்கம் செய்யலாம்.

*16.* (அ) பூதவுடலை நல்லடக்கம் செய்வதற்கு, கல்லறையில் வைப்பதற்கு அறவிடப்படும் கட்டணம் ருவன்வெல்லப் பிரதேச சபையின் பிரேரணை வழிமொழிதல் மூலமாக காலத்திற்குக் காலம் திருத்தம் செய்யலாம்;

(ஆ) மேலே (அ) பந்தியின் கீழ் விதிக்கப்படுகின்ற அல்லது காலத்திற்குக் காலம் திருத்தம் செய்யப்படும் கட்டணங்கள், வர்த்தமானியில் வெளிடப்படுதல் வேண்டுமென்பதோடு மயான பூமியினை ஒதுக்கிக்கொள்வதற்கான விண்ணப்பப்பத்திரங்களைப் பொறுப்பேற்கும் இடத்திலும் மயான பூமியில் பூதவுடல்கள் வைக்கப்படுகின்ற இடத்திலும் தெளிவாகப் புலப்படக்கூடிய இடத்தில் காட்சிக்கு வைக்கப்படுதலும் வேண்டும்.

*17.* இத்துணைச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏதேனும் சட்டத்தினை மீறுதல் அல்லது செய்யாது விடுதல் குற்றமாவதுடன் எவரேனும் ஒருவர் தகுந்த அதிகாரமுள்ள நீதிமன்றமொன்றின் மூலம் குற்றத்திற்குக் குற்றவாளியாக்கப்பட்டதன் பின் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (2) ஆம் உப பிரிவின் மூலம் விதிக்கப்பட்டுள்ள தண்டத்திற்கும், தவறொன்றைப் புரிந்ததன் பின் குறித்த தவறை

தொடர்ந்தும் மேற்கொள்வாராயின் குறித்த மீறல் விடயமாக கவனத்தில் கொண்டு பிரதேச சபையின் தவிசாளர் அல்லது செயலாளர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் அலுவலர் ஒருவரினால் எழுத்து மூலமான அறிவித்தலொன்றை வழங்கியதன் பின்பும் குறித்த தவறினை தொடர்ந்தும் புரிகின்ற ஒவ்வொரு நாளுக்கும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (2) ஆம் பிரிவிற்கேற்ப விதிக்கப்படுகின்ற மேலதிக தண்டத்திற்கும் உட்படுதல் வேண்டும்.

18. இத்துணை விதியினை நடைமுறைப்படுத்தும்போது ஏற்படுகின்ற ஏதேனும் ஒரு சிக்கலின்போது தவிசாளரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

19. இத்துணை விதியில் ஏதேனும் ஒரு சட்டத்தில் பொருள் சம்பந்தமாக ஒவ்வாமை ஏற்படுமிடத்து இதன் சிங்களப் பிரதி அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் வழுவுடையதாய் இருத்தல் வேண்டும்.

20. இத்துணைவிதியின் நடவடிக்கைகளுக்காக பிரதேச சபை என்பது ருவன்வெல்லப் பிரதேச சபையையும், தவிசாளர் என்பது ருவன்வெல்லை பிரதேச சபைத் தவிசாளரையும், செயலாளர் என்பது ருவன்வெல்லப் பிரதேச சபைச் செயலாளரையும், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள் என்பது தவிசாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட ருவன்வெல்லப் பிரதேச சபையின் ஒரு அலுவலரையும், கிராம அலுவலர் என்பவர் பிரதேச செயலகத்திற்கு இணைப்பு செய்யப்பட்டுள்ள கிராம அலுவலரையும், பொலிஸ் அலுவலர் என்பவர் பொலிஸ் திணைக்களத்திற்கு இணைப்பு செய்யப்பட்டுள்ள அலுவலர் என்பதும் பொருள்படும்.

## முதலாவது அட்டவணை

## ருவன்வெல்ல பிரதேச சபையின் ............... பொது மயானத்தினை உபயோகிப்பதற்காக அனுமதி பெறுவதற்கான விண்ணப்பப்பத்திரம்

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :-----.
   முகவரி :-----.
   தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
2. மரணித்தவரின் பூரணமான பெயர் :-----.
3. பிறந்த திகதி :- வருடம் :-----, மாதம் :-----, திகதி :-----.
4. நிலையான முகவரி :-----.
5. கிராம அலுவலர் பிரிவு :-----.
6. மரணித்தவருக்கும் விண்ணப்பதாரிக்குமிடையிலான தொடர்பு :-----.
7. மரண பதிவுச் சான்றிதழின் பதிவு இலக்கம் மற்றும் திகதி :-----.
8. மரணப் பதிவாளரின் பெயர் மற்றும் பிரிவு :-----.
9. மரணத்திற்கான காரணம் :-----.
10. நல்லடக்கம் செய்தல்/கல்லறையில் வைப்பதற்கு வேண்டப்படுகின்ற திகதி மற்றும் நேரம் :-
    (i) திகதி :-----.
    (ii) நேரம் :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன். இக்கோரிக்கைக்கிணங்க சம்பந்தப்பட்ட மயானபூமி ஒதுக்கிக் கொடுக்கப்பட்டால் அந்த மயானபூமியின் கட்டடங்களுக்கு, அதன் ஏனைய நிர்மாணிப்புகளுக்கு மற்றும் மரஞ் செடிகளுக்கு ஏதேனும் சேதமேற்பட்டால் அந்த நட்டத்தை வைப்புத் தொகையிலிருந்து ருவன்வெல்ல பிரதேச சபையினால் கழித்துக்கொள்ள உடன்படுவதோடு அத்தகைய வைப்புத் தொகை மேற்படி அறவிடலுக்குப் போதுமானதாக அமையாவிட்டால் மேலும் தேவையான பணத்தொகையை ருவன்வெல்ல பிரதேச சபைக்குச் செலுத்தவும் உடன்படுகின்றேன். அத்துடன் மயான பூமிகளில் பூதவுடல்களை நல்லடக்கம் செய்தல், கல்லறைகளில் வைத்தலை ஒழுங்குமுறைப்படுத்தல், கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வை செய்தல் பற்றிய துணைவிதிகளின் ஏற்பாடுகளைக் கடைப்பிடிக்கவும் உடன்படுகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**இரண்டாவது அட்டவணை**

**4 ஆவது பந்தியின் (ஆ) அட்டவணை**

**மயான பூமியினை உபயோகிப்பதற்கான கட்டணம் அறவிடும் முறை**

| இலக்கம் | மயான பூமியின் பெயர் | நல்லடக்கம் செய்வதற்கான கட்டணம் (ரூபா) | வைப்புப் பணம் (ரூபா) |
|---|---|---|---|
| 01. | மீபிடியஓவிட (யடான்வல மயானம்) | 25.00 | 100.00 |
| 02. | வலவ்வத்த நகோவிட இஹல கேல்ல (கரவ்தெனிய மயானம்) | 25.00 | 100.00 |
| 03. | மெதகொட மயானம் | 25.00 | 100.00 |
| 04. | கெடமுருத மயானம் | 25.00 | 100.00 |
| 05. | கோனகல - ஹலிஎலகாவ மயானம் | 25.00 | 100.00 |
| 06. | பெதங்கொட மயானம் | 25.00 | 100.00 |
| 07. | எரேபொலமுல்ல மயானம் | 25.00 | 100.00 |
| 08. | தன்னொருவ மயானம் | 25.00 | 100.00 |
| 09. | படுவிட மயானம் | 25.00 | 100.00 |
| 10. | தலுவலான மயானம் | 25.00 | 100.00 |
| 11. | புரன்பொத்த மயானம் | 25.00 | 100.00 |
| 12. | இந்துரான பொது மயானம் | 25.00 | 100.00 |
| 13. | வஹகுல பொது மயானம் | 25.00 | 100.00 |
| 14. | பங்கலிவத்த பொது மயானம் | 25.00 | 100.00 |
| 15. | நிவுன்ஹெல்ல விஹாரகந்த பொது மயானம் | 25.00 | 100.00 |

2-301

---

**தெரணியகல பிரதேச சபை**

துணை விதிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 மற்றும் 126 ஆம் பிரிவுகளின் மூலம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் நிருவாக அதிகாரப் பிரதேசத்தின் தெரணியகல பிரதேச சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள, கீழ்க்குறிப்பிடப்பட்ட துணைவிதி, பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சராகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டது என்பதை இத்தால் பிரகடனம் செய்யப்படுகின்றது.

மஹீபால ஹேரத்,<br>
உள்ளூராட்சி விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சர்,<br>
சப்பிரகமுவ மாகாணம்.

சப்பிரகமுவ மாகாண சபை அலுவலகம்,<br>
மாவனல்லை,<br>
2015, நவெம்பர் 26.

**தெரணியகல பிரதேச சபை**

**வாராந்த சந்தை நடாத்துதல் தொடர்பான இடைக்கால விதிகள்**

1. மேற்படி இடைக்கால விதிகள் தெரணியகல பிரதேச சபை அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தின் வாராந்த சந்தையினை நவீன மயமாக்குதல், மேற்பார்வை செய்தல், நடாத்துதல், நிர்வகித்தலின் பொருட்டான இடைக்கால விதிகளாகும்.

2. சபையினால் அமைக்கப்பட்டு நடாத்திச் செல்லப்படும் யாதொரு வாராந்த சந்தை தொடர்பாகவும் மேற்படி இடைக்கால விதிகளிலுள்ள கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகள் தெரணியகல பிரதேச சபையினால் கடைப்பிடிக்கப்படல் வேண்டும்.

(i) வாராந்த சந்தையின் கட்டிடங்கள் அனைத்தும் செங்கற்களினால் அல்லது கற்களினால் நிலையான கட்டுமான பொருட்களினால் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பதோடு வாராந்தச் சந்தையின் அனைத்துக் கட்டிடங்களின் தரைகளும் கொங்ரீட் இடப்பட்டும் நிலமட்டத்திலிருந்து குறைந்தபட்சம் ஒரு அடி உயரத்திலும் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

(ii) கூரையானது யாதாயினும் நிலையான பொருட்களினால் அமைக்கப்பட்டு நிறைவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) கட்டிடத்தின் உள்ளே வியாபாரக் கடை அறைகள் யாவும் இரண்டு நிரைகளுக்கு இடையே குறைந்தபட்சம் இரண்டு மீற்றர் அகலத்தில் இடைவெளி அமைந்திருப்பதோடு அது மேடை வாடிக்கையாளர்களின் போக்குவரத்துக்கு உகந்த வகையில் நிலையான கட்டுமானப் பொருட்களினால் அமைக்கப்பட்டிருப்பதும் மழைநீர் பயணிகளின் போக்கவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தாது வடிந்தோடும் விதத்தில் அமைக்கப்பட்டிருத்தலும் வேண்டும்.

(iv) வாராந்த சந்தைக்கு உள்ளே அமைக்கப்படும் வியாபாரத் தட்டுகள் அனைத்தும் செங்கற்களினால் அல்லது சீமெந்துக் கற்களினால் அல்லது கருங்கற்களினால் அமைக்கப்பட்ட சுவர்களுக்குமேல் கொங்ரீட் தட்டுகளினாலோ துருப்பிடிக்காத உலோகத் தட்டுகளினாலோ பூரணப்படுத்தப்பட்ட தட்டுகளாக இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், கொங்கிறீட் தட்டுகளால் அமைக்கப்பட்டிருப்பின் அத்தட்டுகள் சீமெந்தினால் மேற்பூச்சுப் பூசி மெருகு செய்யப்பட்டு அல்லது பளிங்குக்கல் பதிக்கப்பட்டு இருத்தல் வேண்டும். இந்த முறையில் வியாபாரத் தட்டை அமைக்கமுடியாத ஏதாயினும் சந்தர்ப்பத்தில் நிலத்தக்குமேல் சமதரையாக இருக்கும் இடப்பகுதி அமைக்கப்பட்டிருக்க வேண்டியதோடு அதன்பகுதிகள் செங்கற்களினால் அல்லது சீமெந்தக் கற்களினால் அல்லது கருங்கற்களினால் கட்டிமுடிக்கப்பட்டு சீமெந்தினால் மேற்பூச்சுப் பூசி மெரு செய்யப்பட்டிருப்பதோடு ஒவ்வொரு பகுதியையும் வேறுபடுத்தும் வகையில் மஞ்சள் நிறக் கோடுகள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(v) கூரைகள் அனைத்துக்கும் மழை நீர்ப்பீலிகள் பொருத்தப்பட்டிருப்பதோடு, பீலியில் தேங்கும் நிர் கீழே வடிந்து செல்வதற்கு போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(vi) நிலையத்தின் தேவைகளுக்கு நீரைச்சேமித்து வைப்பதாயின் அவ்வாறு சேமித்து வைக்கப்படும் நீரானது அசுத்தமடைவதைத் தடுப்பதற்காக போதிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

(vii) ஆண், பெண் இருபாலாருக்கும், அங்கவீனர்களுக்குமாக வேறுவேறாக விசேட வசதிகளுடனான மலசலகூடங்கள் போதுமான அளவு அமைக்கப்பட்டிருப்பதோடு, மலசலகூடங்கள் அனைத்துக்கும் தரை ஓடும், தரைமட்டத்திலிருந்து குறைந்தது 1 மீட்டர் உயரத்திற்கு சுவர் ஓடும் பதிக்கப்பட்டிருத்தலும் வேண்டும்.

(viii) வாராந்த சந்தை கட்டிடங்கள் இரண்டுக்கிடையில் வாடிக்கையாளர்கள் போக்குவரத்துச் செய்யும் நடைபாதைப்பகுதியானது மழையிலும் வெயிலிலும் பாதுகாக்கப்படும் பொருட்டு மூடப்பட்டதாக அமைக்கப்பட்டிருத்தலோடு, கூரையிலிருந்து வடிந்தோடும் மழை நீரானது முறையாக வடிவமைக்கப்பட்ட வடிகாலூடாக வடிந்தோடும் வண்ணம் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ix) வாராந்த சந்தை வளாகத்தினுள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுக்கு ஏற்ப, சிற்றுண்டிச்சாலை ஒன்றினையோ தேநீர்ச்சாலை ஒன்றினையோ அமைத்து நடாத்திச் செல்வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

(x) வாராந்த சந்தையின் வியாபார நிலையங்கள் அனைத்தினதும் பாவனைக்கென அவற்றின் தேவைகளுக்கேற்ப மின்சார இணைப்பு வழங்குவது சபையின் பொறுப்பாகும்.

(xi) வாராந்த சந்தை வளாகத்தினுள் சமய அனுட்டானங்களை பூர்த்தி செய்து கொள்வதற்காக வசதிகளைப் பெற்றுக்கொடுப்பது தெரணியகல பிரதேச சபையின் பொறுப்பாகும்.

(xii) வாராந்த சந்தை வளவினுள் பொது நீர் குழாய்கள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

(xiii) மரக்கறி அல்லது பழங்களை கழுவுவதற்கு வேறுவேறான இடங்கள் ஒதுக்கப்பட்டிருப்பதோடு பொது மலசலகூடங்களிலுள்ள நீர்க் குழாய்களையோ குடிநீர்க் குழாய்களையோ இதற்கெனப் பயன்படுத்தல் ஆகாது.

(xiv) வாராந்த சந்தை வளாகத்தினுள் தேங்கும் அல்லது கூரைகளிலிருந்து வடியும் மழைநீரும், மரக்கறி அல்லது பழங்கள் கழுவும் இடங்களிலிருந்து வெளியேறும் கழிவு நீரும் உரிய முறையில் வெளியேறுவதற்கு ஏற்ற வகையில் போதுமான அளவு வடிகாலமைப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். அத்தோடு அக்கழிவு நீரானது தடையின்றி வடிந்து செல்வதற்கு ஏற்ப அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(xv) வாராந்த சந்தை வியாபார நிலையங்களின் அமைப்பைக் கருத்திற்கொண்டு, இறைச்சி, மீன், கருவாடு, மரக்கறி, பழவகை, மளிகைப் பொருட்கள் மற்றும் வியாபாரப் பொருட்கள் என்பன விற்பனை செய்வதன் பொருட்டு வாராந்த சந்தை பிரிவுகளாகப் பிரித்து ஒதுக்கப்படுதலும் பெயர்ப்பலகைகளைக் காட்சிப்படுத்தலும் தெரணியகல பிரதேச சபையின் பொறுப்பாகும்.

(xvi) சூழலில் பெருகும் கழிவுப்பொருட்கள் :

(அ) உக்காத கழிவுப் பொருட்கள்
(ஆ) கண்ணாடி
(இ) கடதாசி அல்லது கடதாசி சார்ந்த பொருட்கள்
(ஈ) பொலிதீன், பிளாஸ்டிக் அல்லது பொலிதீன், பிளாஸ்டிக் சார்ந்த பொருட்கள்
(உ) இரும்பும் வேறு உலோகங்களும் அல்லது இரும்பும் வேறு உலோகங்கள் தொடர்பான பொருட்களும்
(ஊ) ஊறு விளைவிக்கக்கூடிய கழிவுப்பொருட்கள்

வேறு வேறாக சேகரித்து வைக்கக்கூடிய தொட்டி அல்லது பாத்திரங்களை வாராந்தச் சந்தையின் வெவ்வேறு இடங்களில் வைத்திருக்க வேண்டியதோடு, உக்காத கழிவுப்பொருட்களை இடக்கூடிய தொட்டி அல்லது பாத்திரம் அல்லது தாங்கியினுள் எலிகளும் ஈக்களும் வேறு பூச்சிகள், கிருமிகளும் பறவைகளும் உள்ளே நுழைய முடியாதவாறு நன்றாக மூடி வைத்திருத்தல் அல்லது சூழலில் பெருகும் குப்பைகளை அகற்றுதல் தொடர்பாக முறையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

3. (i) வாராந்த சந்தையிலுள்ள ஏதாவது வியாபார நிலையமொன்றில் பண்டங்களை விற்பனை செய்யும் எவரேனும் நபர்கள் அல்லது சந்தையினுள் நடமாடும் வியாபாரத்துக்கெனப் பற்றுச்சீட்டு பெற்றுக்கொண்ட எவரேனும் நபர்கள் மூலம் வியாபார சூழலில் அல்லது அதற்கு அண்மையில் அல்லது வியாபாரத் தட்டுகளில் அல்லது அதற்கு அண்மையில் பெருகும் கழிவுப்பொருட்களான–

(அ) உக்காத கழிவுப்பொருட்கள்
(ஆ) கண்ணாடி
(இ) கடதாசி அல்லது கடதாசி சார்ந்த பொருட்கள்
(ஈ) பொலிதீன், பிளாஸ்டிக் அல்லது பொலிதீன், பிளாஸ்டிக் சார்ந்த பொருட்கள்
(உ) இரும்பும் வேறு உலோகங்களும் அல்லது இரும்பு வேறு உலோகங்கள் தொடர்பான பொருட்களும்
(ஊ) ஊறு விளைவிக்கக்கூடிய கழிவுப்பொருட்கள்

போன்றவைகளை வகைப்படுத்தி அதில் ஒவ்வொரு வகையிலும் தெரணியகல பிரதேச சபையின் மூலமாக அமைக்கப்பட்டிருக்கும் வேறு வேறான தொட்டிகளில் அல்லது பாத்திரங்களில் அல்லது தாங்கிகளில் இட்டுவைத்தல் அல்லது சபையினால் கழிவுப் பொருட்களை அகற்றுதலின் பொருட்டு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் வழிமுறைகளுக்கு ஏற்பக் கழிவுப் பொருட்களை அகற்றுதல் மேற்குறித்த நபர்களுக்கு உரித்தான பொறுப்பாகும்.

(ii) வாராந்த சந்தையில் காணப்படும் கழிவுப்பொருட்களைச் சேகரிக்கும் உறைகளில் அல்லது பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் அல்லது தாங்கிகளில் இடுவதற்கென வகை பிரிக்கப்பட்ட கழிவுப் பொருட்களை அன்றி வேறு வகைக் கழிவுப் பொருட்களை இடுவதை எவரேனும் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

(iii) இரண்டாவது இடைக்கால விதிகளில் XIV ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் உக்காத கழிவுப்பொருட்களைத் தொட்டியில் இடும் சந்தர்ப்பத்தில் அல்லது கழிவுப்பொருட்களை வெளியே எடுக்கும் சந்தர்ப்பத்தில் அல்லாமல் வேறு எல்லாச் சந்தர்ப்பத்திலும் பாத்திரங்கள் அல்லது தொட்டிகள் அல்லது தாங்கிகள் முறையாக மூடப்பட்டிருக்க வேண்டும்.

4. (i) ஏதாவதொரு வாராந்தச் சந்தையில் வியாபாரத்துக்காக வேறாக்கப்பட்டிருக்கும் இடப்பிரமாணம் என்பது சபையின் மூலமாக உறுதியாக இனங்காணப்பட்ட இட எல்லை எனப் பொருள்படும்.

(ii) வாராந்த சந்தைக்கு விற்பனைக்கென எடுத்துவரப்படும் எந்தவொரு பொருள் அல்லது பண்டம் அல்லது வியாபாரத்தின் பொருட்டு பயன்படுத்தப்படும் ஏதேனும் உபகரணம் அல்லது வேறு ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் அல்லது வெளியில் எடுத்துச் செல்லப்படும் சந்தர்ப்பம் தவிர்ந்த மற்றைய எந்தவொரு சந்தர்ப்பத்திலும், மேலே 4 (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள வியாபாரத்தின் பொருட்டு ஒதுக்கப்பட்டிருக்கும் எல்லைக்கு வெளியே வைப்பது அல்லது அவ்வாறு செய்வதற்கு இடமளிப்பது தவிர்க்கப்பட வேண்டும்.

(iii) வாராந்த சந்தையினுள் எல்லை அடையாளமிடப்பட்ட வியாபார நடவடிக்கையின் பொருட்டு அனுமதி தரப்பட்டிருக்கும் இடங்களைத் தவிர்த்து வேறு ஏதேனும் இடத்தில் வியாபாரத்தை மேற்கொள்ள முடியாததோடு நடைபாதை இடங்களில் போக்குவரத்துச் செய்யும் நபர்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாதிருத்தல் வேண்டும்.

5. 2 IX ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்திலன்றி வாராந்த சந்தை சூழலில் வேறு எந்தவொரு இடத்திலும் சமையல் செய்வது எவராலும் செய்யப்படக் கூடாததாகும்.

6. தெரணியகல பிரதேச சபைக்கு சொந்தமான யாதாயினும் ஒரு வாராந்தச் சந்தையில்–

(i) ஒழுங்கீனமாக நடந்துகொள்வது அல்லது குழப்பங்களை ஏற்படுத்துவது அல்லது போதைபொருள், மதுபானம் பாவித்து நடந்துகொள்வது அல்லது தகாத வார்த்தைகளைப்பேசுவது அல்லது பிச்சை எடுப்பது;

(ii) நாளாந்த நடவடிக்கைகள் நிறைவுபெற்று வாராந்தச்சந்தை மூடப்பட்ட பின்னரும் சந்தைச் சுற்றாடலில் தங்கி நிற்றல்;

(iii) ஏதாவதொரு கட்டடத்துக்கு, கட்டுமானத்துக்கு அல்லது பொருத்துகளுக்கு அல்லது அழகுக்காக வளர்க்கப்பட்டுள்ள அல்லது வைக்கப்பட்டுள்ள ஏதாவது பூச்செடிகளுக்கு அல்லத பெயர்ப்பலகைக்கு அல்லது வேறு ஏதேனும் பொருட்களுக்கு ஊறு விளைவித்தல் அல்லது நட்டமேற்படுத்துதல் அல்லது அலங்கோலப்படுத்துதல்;

(iv) பாவனைக்கென வழங்கப்பட்டிருக்கும் நீரை அசுத்தமாக்குதல் அல்லது விரயமாக்குதல் அல்லது வீண்விரயமாக இடமளித்தல் அல்லது வேறு யாதேனும் வழியில் விரயமாக்குதல் அல்லது அந்த நீரில் குளித்தல், அல்லது துணி அல்லது விலங்குகளைக் கழுவுதல் அல்லது காய்கறி பழங்களை கழுவுவதற்குரிய இடத்தைத் தவிர்த்து வேறு இடங்களில் அவற்றைக் கழுவுதல்;

(v) மின்சார இணைப்பை பெற்றுக்கொள்ளும் பிரதான விசைப்பலகையை அண்மித்தலுக்கு இடையூறாகும் வகையில் பொருள் பண்டங்களை வைத்திருத்தல் அல்லது பிரதான விசைப்பலகைக்கு ஊறு விளைவித்தல்;

(vi) நீர் இணைப்பைப் பெற்றுத்தருவது பொருட்டு கட்டிடத்தினுள் அமைக்கப்பட்டுள்ள பிரதான குழாயிலிருந்து அல்லது வேறு ஏதாவது குழாயிலிருந்து திருட்டுத்தனமாக நீர் இணைப்பைப் பெற்றுக்கொள்ளல்;

(vii) உரிய தேவைகளுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களைத் தவிர வேறு ஏதாவது பிரிவில் மரக்கறி, இறைச்சி அல்லது மீன் விற்பனைக்காக காட்சிப்படுத்தல் அல்லது அவ்வாறு செய்வதற்கு முயற்சித்தல்;

(viii) வாராந்த சந்தை சூழலில் அமைக்கப்பட்டுள்ள வாகன நிறுத்துமிடத்திலன்றி வேறு இடங்களில் மிதிவண்டிகள் அல்லது மோட்டார் சைக்கிள் அல்லது மோட்டார் வண்டிகளைக் கொண்டுசெல்லல் அல்லது அவ்வாறு செய்வதற்கு அனுமதித்தல்;

என்பன எவரேனும் ஒருவரால் செய்யப்படக்கூடாததாகும்.

7. (i) யாதாயினும் ஒவ்வாமை அல்லது தொற்று நோயினால் அல்லது தொற்றுநோயினால் பாதிக்கப்பட்ட அல்லது அண்மையில் தொற்றுநோயினால் பாதிக்கப்பட்ட ஒருவரை பாமரித்தலில் ஈடுபட்டிருந்த ஒருவர் அத்தகைய நோய் பரவும் அல்லது நோய் பரவக்கூடிய காலப்பகுதி தடைபட்டிருந்தால் மட்டுமே வாராந்த சந்தையினுள் யாதாயினும் ஒரு வகை வியாபாரத்தில் அல்லது வியாபாரிக்கு உதவியாளராக இருப்பதற்கு வாய்ப்பளிப்பது கூடாது.

(ii) நன்கு கழுவிச் சுத்தமாக்கிய ஆடைகளை அணிந்திருந்தால் அன்றி எவரேனும் ஒருவர் பொது வியாபார நிலையத்தில் ஏதாவதொரு வகையில் வியாபாரத்தில் ஈடுபடுவது அல்லது ஈடுபட வாய்ப்பளிப்பது கூடாது.

8. வாராந்த சந்தைச் சுற்றாடல், சந்தை நடைபெறும் தினத்துக்கு முன் தினம் முழுமையாகச் சுத்தப்படுத்துதலும் வாராந்தச்சந்தை நடைபெற்று நிறைவுபெற்றதும் மீண்டும் ஒருமுறை முழுமையாகச் சுத்தப்படுத்துதலும் தெரணியகல பிரதேச சபையின் பொறுப்பாகும்.

9. வாராந்த சந்தையில் மரக்கறி, பழவகை, இறைச்சி, மீன், கருவாடு அல்லது பல்வேறுவகை உணவுகள் அல்லது பானவகை விற்பனை செய்கின்ற நபர்கள் மூலம் உரிய வாராந்த சந்தை நடாத்தப்படும் தினமுடிவில் தான் வியாபாரத்தில் ஈடுப்பட்ட இடம் அல்லது தட்டு ஏற்ற வகையில் கழுவி அல்லது தேய்த்து சுத்தப்படுத்திக்கொள்ள வேண்டும்.

10. தெரணியகல பிரதேச சபையின் மூலமாக வியாபார சந்தை வளவினுள் ஒதுக்கிக் கொடுக்கப்பட்ட எந்தவகைப் பொருளுக்கும் அல்லது பொருள் விற்பனைக்காக ஒதுக்கிக் கொடுக்கப்பட்ட பண்டம் அல்லது பொருள் தவிர்ந்த வேறு ஏதேனும் பண்டம் அல்லது பொருள் விற்பனைக்காக காட்சிப்படுத்துவது எவரொருவராலும் தவிர்க்கப்பட வேண்டும்.

11. மாடுகளை வெட்டும் சட்ட விதிகளின் கீழ் முறையான ஒரு அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கும் கால்நடைகளை வெட்டும் இடத்தில் கொல்லப்பட்ட யாதேனும் ஒரு பிராணியின் இறைச்சியாக இருப்பின் மட்டுமே அன்றி வாராந்த சந்தையில் இறைச்சி விற்கும் இடத்தில் விற்பனை செய்தலோ அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தலோ அல்லது களஞ்சியப்படுத்தலோ யாரேனும் நபரொருவரால் மேற்கொள்ளப்படாதிருத்தல் வேண்டும்.

12. யாதேனும் கால்நடைகள் வெட்டப்படும் இடத்தினுள் யாதேனும் ஒரு தினத்தில் இறைச்சிக்காக விலங்குகளைக் கொல்வது தடைசெய்யப்பட்டு கால்நடை வெட்டப்படும் சட்டத்தின் 17 ஆவது விதியின் அதிகாரத்தின்பேரில் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில், வாராந்த சந்தையினுள் எவரொருவராலும் நடாத்திச் செல்லப்படும் ஏதாவதொரு இறைச்சிக்கடையில் இறைச்சி வியாபாரம் செய்யும் பொருட்டு இறைச்சியை வைத்திருத்தல் அல்லது வியாபாரத்தின் பொருட்டு இறைச்சியைக் காட்சிப்படுத்தல் அல்லது களஞ்சியப்படுத்தலை மேற்கொள்ளாதிருக்க வேண்டும்.

13. எந்த நபரொருவராலும் வாராந்த சந்தை வளவினுள் நாயொன்றினை அல்லது பூனையொன்றினை அல்லது வேறு யாதேனும் விலங்கு ஒன்றினை அல்லது பறவையொன்றினைக் கொண்டு வருதலை அல்லது கொண்டு வருவதற்கு இடமளித்தலை மேற்கொள்ளப்படக்

கூடாது. இவ்விதிமுறையால் யாதேனும் ஒரு விசாரணையின் பொருட்டு பொலிஸ் அதிகாரி எவராலேனும் பொலிஸ் நாயொன்று வாராந்த சந்தையினுள் கொண்டு வரப்படுதலும் தடைசெய்யப்பட்டுள்ளதென அர்த்தப்படுத்துதல் ஆகாது.

*14.* வாராந்த சந்தையில் வியாபாரத்தை நிறைவுசெய்து வாராந்தச் சந்தையை முழுமையாக மூடி வைக்கும் சந்தர்ப்பத்திலும் வாராந்த சந்தையில் ஏதாவது வியாபாரத் தட்டேனும் மூடிவைக்கப்பட்டு வெளியேறும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அந்த வியாபாரச் சூழலிலுள்ள மின் விளக்குகள், மின் விசிறிகள் மற்றும் வேறு மின்சார உபகரணங்கள் அனைத்தும் அணைத்து வைக்கப்படல் வேண்டும்.

*15.* 2ஆம் துணைவிதியின் XI ஆவது பந்தியில் குறித்து ஒதுக்கப்பட்டுள்ள இடத்திலன்றி வாராந்த சந்தைச் சூழலில் வேறு எந்தவொரு இடத்திலேனும் சமயக் கிரியைகளின் பொருட்டு விளக்கோ மெழுகுவர்த்தியோ ஏற்றி வைத்தல் கூடாது.

*16.* வாராந்த சந்தையிலுள்ள மலகூடங்கள் மற்றும் சலகூடங்கள் அனைத்தும் வாராந்த சந்தை நடைபெறும் அனைத்துத் தினங்களிலும் குறைந்தது மூன்று தடவைகள் கிருமிநாசினி தெளித்துக் கழுவி சுத்தப்படுத்துதலுக்கும், நீர் வடிந்து செல்வதற்காக அமைக்கப்பட்டுள்ள வடிகால்கள் யாவும் வாராந்த சந்தை நடைபெறும் அனைத்துத் தினங்களிலும் குறைந்தது இரண்டு தடவைகள் வீதம் கழுவிச் சுத்தப்படுத்தலுக்கும் உரிய ஏற்பாடுகளை அமைத்துக் கொடுப்பது சபைத் தலைவரின் பொறுப்பாகும்.

*17.* 2 ஆவது துணைவிதியில் XVI ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைக்கப்பட்டுள்ள தொட்டியில், பாத்திரத்தில் அல்லது தாங்கியில் சேகரிக்கப்படும் கழிவுப் பொருட்கள் வாராந்த சந்தை நடைபெறும் தினத்திலேயே குறைந்தது நாளொன்றுக்கு ஒரு தடவை அல்லது தேவையேற்படுமிடத்து மேலும் பல தடவைகள் அவ்விடங்களிலிருந்து அகற்றிக்கொள்வதற்குரிய ஏற்பாடுகளை அமைத்துக் கொடுப்பது சபைத்தலைவரின் பொறுப்பாகும்.

*18.* வாராந்தச் சந்தையில் யாதேனுமொரு வியாபார நிலையத்தைப் பயன்படுத்துவதற்கு 23 ஆவது துணைவிதியின் பிரகாரம் அனுமதிப்பத்திரம் பெற்ற யாரேனும் நபரொருவரால் அந்த அனுமதிப்பத்திரத்தை வேறொருவருக்கு வழங்குவது அல்லது அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளமை, குறித்த விற்பனை நிலையம் அல்லது விற்பனைத் தட்டின் பொருட்டாவதோடு அவ்வியாபார நிலையத்திலன்றி வேறு வியாபார நிலையத்தில் வியாபாரம் மேற்கொள்ளல் ஆகாது என்பதோடு, யாராவது நபரொருவரால் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருப்பதாகச் சபைத் தலைவர் அல்லது அதிகாரம் பெற்ற அதிகாரி தெரிந்துகொள்ளும்பட்சத்தில் அந்நபருக்குக் குறித்தொதுக்கப்பட்ட இடத்தில் வியாபாரம் செய்வதற்கு வழி செய்தல் அல்லது அத்தினத்தில் அவ்விடத்தில் வியாபார நடவடிக்கைகளிலிருந்து விலக்கி வைக்க அல்லது அவருக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தை இரத்துச்செய்ய சபைத் தலைவருக்கு அல்லது அதிகாரம் பெற்ற அதிகாரிக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

*19.* ஏதாயினும் ஒரு வாராந்த சந்தையின் வியாபார நிலையத்தை பயன்படுத்துவதற்கு அல்லது பாவிப்பதற்குப் பெற்றுக்கொண்டுள்ள எவராவது நபரொருவரால் இடத்தைத் தீர்மானித்தல் தொடர்பாக சபையினோடு செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் தன்னுடைய வியாபார நிலையத்தின் வியாபார நடவடிக்கைகளின் பொருட்டு ஒதுக்கப்பட்ட வியாபார நிலையத்தில் இடவசதி இல்லாவிடின் அதன் ஏதோவொரு பகுதியினையும் ஏதாவதொரு பண்டம் அல்லது பொருள் வியாபாரம் செய்வதற்கு அல்லது வியாபாரம் செய்வதற்கெனக் காட்சிப்படுத்துவதற்கு அல்லது வேறு ஏதாயினும் காரியத்துக்கு வேறு யாராவது நபருக்கு இடந் தருதல் கூடாது.

*20.* தெரணியகல பிரதேச சபையினால் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்ட காரியங்களுக்காக அதிகாரம் வழங்கப்பட்டாலேயன்றி எவரேனும் நபரொருவரால் வாராந்த சந்தையில் எந்தவொரு வியாபாரக் கட்டடத்தை மாற்றுதல் அல்லது அத்திட்டத்தைப் பாதிக்கும் வகையில் எந்தவொரு கட்டுமானங்கள் அல்லது மாற்றங்கள் செய்தல் அல்லது பகுதியாக்குதலைச் செய்யாதிருத்தல் வேண்டும்.

*21.* தெரணியகல பிரதேச சபையினால் நடாத்திச் செல்லப்படுகின்ற ஏதாவதொரு வாராந்த சந்தையினைத் திறந்து வைத்திருக்கும் தினங்களும் அல்லது நேரங்களும் தெரணியகல பிரதேச சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானித்துக் கொள்ளப்படலாம். தெரணியகல பிரதேச சபையினால் அவ்வாறு தீர்மானிக்கப்பட்டவாறு வாராந்த சந்தை திறந்து வைக்கப்படும் தினங்களும் நேரங்களும் எவ்வாறு எனும் விபரத்தை அறிவித்தல் அல்லது மும்மொழிகளிலும் அறிவித்தல் தெளிவாகத் தெரியும் வண்ணம் வாராந்த சந்தையின் நுழைவாயிலின் அருகில் காட்சிப்படுத்தி வைத்திருக்க ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்வது சபைத்தலைவரின் பொறுப்பாகும்.

*22.* வாராந்த சந்தையின் வியாபார நிலையங்களில் வியாபாரத்தில் ஈடுபடும் எந்தவொரு நபரும் தெரணியகல பிரதேச சபையின் மூலம் இவ்விடைக்கால விதிகளின் முதலாவது அட்டவணையில் தயார் செய்யப்பட்டிருக்கும் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்டிருந்தாலன்றி எந்தவொரு வியாபார நடவடிக்கைகளிலும் ஈடுபட முடியும். அதற்கான கட்டண விபரம் தெரணியகல பிரதேச சபையினால் காலத்துக்குக் காலம் மாற்றம் செய்யப்படுதல் அல்லது திருத்தம் செய்யப்படுதல் சட்டவிதிகளுக்கு உட்பட்டதாகும்.

*23.* தெரணியகல பிரதேச சபையின் வாராந்த சந்தை வியாபார நிலையத்தை ஒதுக்கித்தருதல் தொடர்பாக கையொப்பமிடப்பட்ட இடத்தை நிர்ணயம் செய்வதற்கான ஒப்பந்த படிவத்தில், கட்டளைகளுக்கு மற்றும் வரையறைகளுக்கு அமையக் கட்டுப்பட்டாலேயன்றி யாரேனும் நபரொருவரால் வாராந்த சந்தையின் வியாபார நிலையத்தைப் பயன்படுத்தவோ அலல்து பாவிக்கவோ இயலாது.

24. வாராந்தச் சந்தையில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற எந்தவொரு நபரும் தெரணியகல பிரதேச சபையுடன் 2 ஆவது துணைவிதியின் பிரகாரம் வருடாந்த, கையொப்பமிடப்படுகின்ற வியாபார நிலையத்தின் பொருட்டான இடத்தை ஒதுக்கிக்கொள்ளும் (இடத்தைத் தீர்மானிக்கும்) ஒப்பந்தப் பத்திரத்தில் ஒப்பமிட வேண்டியதோடு ஒப்பந்தத்தில் கூறப்படுகின்ற நிபந்தனைகளுக்கும் விதிமுறைகளுக்கும் ஏற்ப நடந்துகொள்ள வேண்டும்.

25. 24 ஆவது இடைக்கால விதிகளில் எவை குறிப்பிடப்பட்டுள்ளதோ இப்பிரிவில் இடைக்கால விதிகள் நடைமுறைக்கு வரும் தினத்துக்கு தெரணியகல பிரதேச சபைக்கு உரித்தான யாதேனும் வாராந்தச் சந்தையில் ஒவ்வொரு விற்பனை நிலையங்கள் தொடர்பாகவும் தெரணியகல பிரதேச சபையுடன் இறுதியாக கையொப்பம் இடப்பட்ட வாராந்தச் சந்தையில் இடங்களைத் தீர்மானிக்கும் ஒப்பந்தத்தில் குறிக்கப்பட்டுள்ள விற்பனைச் செயற்பாட்டில் ஈடுபடும் ஒருவர் அது ஒப்படைக்கப்பட்ட தினத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் 23 ஆவது இடைக்கால விதிகளின் கீழ் அவ்வியாபார இடத்தைப் பாவித்துக்கொள்ள அல்லது பயன்படுத்திக்கொள்ளத் தேர்ந்தெடுத்துக் கொண்ட வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொள்ளும் ஒருவராகக் கருதப்படுவது சட்டரீதியானதாகும். அவ்வாறு மேலும் இந்த இடைக்கால விதிகளுக்கு உட்பட்ட எவரேனும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் ஒருவர் இப்பகுதியில் இடைக்கால விதிகள் நடைமுறைக்கு வரும் தினத்திலிருந்து மூன்று மாத காலத்துக்குள் 24 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கு அமையப் புதிய ஒப்பந்தத்துக்கு உட்படுதல் வேண்டும்.

26. (i) 24 மற்றும் 25 ஆவது இடைக்கால விதியின் கட்டளையின் கீழ் தெரணியகல பிரதேச சபையுடன் கையொப்பமிடப்பட்ட ஏதேனும் ஓர் உடன்படிக்கை ஒரு வருட காலத்துக்காக மட்டும் செல்லுபடியாக வேண்டுவதோடு அவ்வருட காலம் முடிவடைவதற்கு ஒரு மாதத்திற்கு முன் எதிர்வரும் ஆண்டின் பொருட்டு தெரணியகல பிரதேச சபையுடன் புதிய உடன்படிக்கைக்கு உட்பட்டபின் இன்னும் ஒரு வருடத்திற்கென அந்த வாராந்த சந்தையின் நிலையத்தை ஒதுக்கிக் கொள்வது சட்டரீதியானதாகும். அந்த வகையில் ஒவ்வொரு வருடத்துக்குமான விற்பனை நிலையத்தின் உடன்படிக்கையை வருடா வருடம் புதுப்பித்துக் கொண்டு அந்நிலையத்தைப் பயன்படுத்துவதற்கு அவ்வுடன்படிக்கையாளருக்கு உரிமை வழங்கப்பட வேண்டும்.

(ii) எப்படியாயினும் 26 (i) பந்தியின் கீழ் யாரேனும் உடன்படிக்கையாளர் மூலம் எதிர்வரும் வருடத்திற்கான உடன்படிக்கைக்குள்ளான காலத்தை புதுப்பித்துக்கொண்டு விற்பனை நிலையத்தை பயன்படுத்துவது அல்லது பாவிப்பதற்காக உரிய வருடத்தில் செலுத்த வேண்டிய நாளாந்த அனுமதிப்பத்திர கட்டணம் இவ்விடைக்கால விதியின் 3 ஆவது அட்டவணையில் சுருக்கமாக குறிப்பிடப்பட வேண்டும்.

27. ஏதேனும் வியாபார நிலையத்தின் உடன்படிக்கைக் காலம் முடிவடையும் திகதியிலிருந்து ஒரு மாத காலத்தினுள் 30 ஆவது இடைக்கால விதியின் கீழ் எதிர்வரும் வருடத்திற்காக உடன்படிக்கை காலம் புதுப்பிக்கப்பட்டிருப்பின் அல்லாமல் எவரேனும் உடன்படிக்கையாளருக்கு பாவிப்பதற்கு அல்லது பயன்படுத்துவதற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வியாபர நிலையம் அந்த மாதம் முடிவடையும் இறுதிநாளுக்குப் பின்னர் அந்த விற்பனை நிலையம் பாவிப்பதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு உரித்துடைமை இல்லாதிருத்தல் வேண்டும்.

28. வாராந்தச் சந்தையில் ஏதேனும் வியாபாரத்தை ஒதுக்கி கொடுத்திருக்கும் உடன்படிக்கைப் பத்திரத்திற்கு ஏற்ப வியாபார நிலையத்தை ஒதுக்கிக்கொண்டிருக்கும் உடன்படிக்கையாளரைத் தவிர வேறு எவரும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுதல் சட்டரீதியானதன்று என்பதோடு அந்நிலையத்தில் வேறு ஒருவர் வியாபார நடவடிக்கையில் ஈடுப்படுத்தப்பட்டிருப்பது தெளிவாகும் பட்சத்தில் உடன்படிக்கை இரத்துச்செய்யப்பட்ட காரணத்தினால் அவ்வியாபார நிலையம் தெரணியகல பிரதேச சபையினால் உரித்தாக்கிக் கொள்வதன் காரணமாக அதன் உடன்படிக்கையாளருக்கு ஏற்படும் நட்டம் அல்லது பாதிப்பு அல்லது இழப்பு அந்த உடன்படிக்கையாளருக்கே உரித்தாகுவதோடு தெரணியகல பிரதேச சபை அல்லது சபைத் தலைவர் அல்லது செயலாளர் அதிகாரம் பெற்ற அலுவலர் எவரேனும் அது தொடர்பாக வகைகூறலுக்கு உட்பட்டவர் அல்லர்.

29. வாராந்தச் சந்தையின் வியாபார நிலையத்தை ஒதுக்கிக் கொள்ளும் பொருட்டு உடன்படிக்கைக்கு உள்ளாகும் போது தெரணியகல பிரதேச சபையின் பொதுச் சபையின் மூலம் காலத்திற்கு காலம் கட்டளையிடப்படுகின்ற, உடன்படிக்கையாளரினால் ஒரே தடவையில் செலுத்தவேண்டிய பணத்தைப் பெற்றுக்கொண்டு உடன்படிக்கை செய்துக்கொள்வது சட்டரீதியானதாகும்.

30. (i) வாராந்தச் சந்தையில் ஏதேனும் ஒரு வியாபார நிலையமொன்றிற்காக உடன்படிக்கையாளரினால் கொடுக்கப்படுகின்ற தெரணியகல பிரதேச சபைக்குச் செலுத்தப்படவேண்டிய ஒவ்வொரு தினத்திலும் அட்டவணை இல. : 2 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்தப்படுவதோடு அத்தகைய அனுமதிக்கட்டணத்தைச் செலுத்துமாறு வருமான நிர்வாகியினால் அல்லது சபையின் தலைவரினால் அதிகாரம் வழங்கப்பெற்ற வேறு யாரேனும் ஒரு அதிகாரியினால் கேட்டுக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் செலுத்துதலின்றி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் எந்தவொரு நபரும் அனுமதியின்றி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவராகக் கருதி வியாபார நிலையத்திலிருந்து வெளியேற்றப்படுவது சட்டரீதியானதாகும்.

(ii) வாராந்தச் சந்தை நடாத்தப்படும் ஏதேனும் ஒரு தினத்தில் முதல் தடவையாக வரும் வியாபாரி ஒருவருக்கு உடன்படிக்கை செய்துகொள்ளப்படாமலே அத்தினத்துக்கு மட்டும் அனுமதிப்பத்திரம் வழங்கி வியாபார நிலையத்தைப் பயன்படுத்துவதற்கு இயலுவதோடு அதன் பிறகு நடைபெறும் வாராந்தச் சந்தைத் தினம் வரும்போது சட்டபூர்வமான வியாபார நிலையமொன்றினை ஒதுக்கிக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

(iii) 30 (i) பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டவர்களுக்கிடையே அல்லது அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டவர்களின் அதிகாரம்பெற்ற சேவையாட்களிடையே அல்லது அவர்கள் பொதுமக்களிடையே வியாபார நிலையத்தைப் பயன்படுத்துதல் தொடர்பாக ஏற்படக்கூடிய பிரச்சினைகளை சபைத்தலைவரினால் அல்லது தலைவரினால் அதிகாரம் வழங்கப்பெற்ற சந்தை வளவினுள் கடமையில் ஈடுபட்டிருக்கும் அலுவலரினால் தீர்த்து வைக்கப்பட முடியும்.

(iv) சந்தை அமைந்திருக்கும் வளவினுள் சமாதானத்தை ஏற்படுத்திக் கொள்வது சபையினால் நியமிக்கப்பட்டு சந்தை அமைந்திருக்கும் வளவினுள் கடமையிலீடுபடும் அலவலரின் அல்லது அலுவலர்களின் மூலம் நடைபெற வேண்டும்.

(v) பொருட்களை வாங்குவதற்கு அல்லது விற்பதற்குச் சந்தைக்கு வரும் நபர்களினால் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்காக அல்லது சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக சபையின் அதிகாரி ஒருவரால் அல்லது பொலிஸ் அதிகாரி ஒருவரால், வழங்கப்படுகின்ற சட்டரீதியான கட்டளைகள் பின்பற்றப்படுதல் வேண்டும்.

(vi) சந்தை அமைந்திருக்கும் வளவினுள் விற்பனைக்காகக் காட்சிப்படுத்தி வைத்திருக்கும் உணவுப்பொருட்கள் உண்பதற்கு உகந்தவை அல்ல எனத் தனக்குத் தெரிந்தவிடத்து தலைவரினால் அல்லது சுகாதார வைத்திய அதிகாரியினால் அல்லது தலைவரின் அதிகாரத்தின் கீழ் செயற்படுகின்ற யாராவது சுகாதாரப் பரிசோதகரால் அவ்வுணவு பொருட்கள் பரிசோதிக்கப்பட்டுத் தடைசெய்வதற்கு சட்டத்தில் அனுமதிக்கப்பட்டதாகும்.

(vii) vi பந்தியின்கீழ் தடைசெய்யப்பட்ட உணவுப்பொருளானது உண்பதற்குப் பொருத்தமற்றது என அரச வைத்திய அதிகாரியொருவரினால் சான்று வழங்கப்பட்டால் அப்பொருட்களைத் தடைசெய்யும்போது அப்பொருளுக்கு உரிய நபருக்க நட்டஈடு எதுவும் தரப்படாது பொருட்களை அழித்துவிட இயலும்.

(viii) சபைத் தலைவரின் எழுத்துமூல அனுமதியை பெற்றுக்கொள்ளாமல் தனக்குக் கொடுக்கப்பட்ட வியாபார நிலையத்தின் அருகிலேயுள்ள இடத்தில் அல்லது இடவளவில் ஏதேனும் ஒரு பகுதியில் மறைப்பை ஏற்படுத்துதல் அல்லது கோடு வரைந்து கொள்ளல் அல்லது கூரை அமைத்துக்கொள்ளல் அல்லது ஏதாவது தற்காலிக அல்லது நிரந்தர மாற்றத்தை ஏற்படுத்துதல் கூடாது.

(ix) சபைக்குரிய சொத்தல்லாத எந்தவொரு பெட்டியொன்று, மேசையொன்று, நற்காலியொன்று, அவைபோன்ற வேறு பொருளொன்று சபை தலைவரின் அனுமதியின்றித் தமது வியாபார நிலையத்திற்குக் கொண்டுவருதல் அல்லது அங்கே வைத்துக்கொள்ளுதல் போன்று அந்த வியாபார நிலையத்தில் அல்லது வியாபார நிலையத்திற்கு அருகில் ஏதாவது மடுவம் அமைத்தல் அல்லது வேறு உபகரணங்கள் செய்தல் கூடாது.

31. வாராந்தச் சந்தை வளவினுள் பொதுப் பாவனைக்கென அமைத்திருக்கும் மின்சார இணைப்பிலிருந்து அல்லது பொது நீர்க் குழாயிலிருந்து ஏதேனும் ஒரு வியாபார நிலையத்திற்கு மின்சாரம் வழங்குதல் அல்லது நீர் விநியோகம் பெற்றுக்கொள்ளல் அல்லது பெற்றுக்கொள்ள இடந்தருதல் கூடாது.

32. வாராந்த சந்தையில் வியாபார நிலையத்தைப் பயன்படுத்த அல்லது பாவிக்கத் தேவைப்படும் நபரொருவருக்கு அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கும் அந்த அனுமதி பத்திரத்தின் பொருட்டு கட்டணத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் செயலாளரின் அதிகாரம்பெற்ற எவரேனும் அதிகாரியொருவரை இணைத்துக்கொள்ள இயலும். அவ்வாறே எவரேனும் அதிகாரம் பெற்ற அதிகாரியொருவர் மூலம் அனுமதிப்பத்திரம் விநியோகம் செய்து தினந்தோறும் சேகரிக்கப்படும் பணமானது அன்றை தினம் பி. ப. 3.00 மணிக்கு முன்னர் தெரணியகல பிரதேச சபையின் பொது நிதியில் வைப்புச்செய்வதற்கு ஒழுங்குசெய்வது அதிகாரம்பெற்ற அதிகாரியொருவரின் பொறுப்பாகும். ஏதாவதொரு தினத்தில் அந்த அதிகாரம்பெற்ற அதிகாரியினால் சேகரிக்கப்பட்ட பணம் தெரணியகல பிரதேச சபை பொது நிதியில் வைப்புச்செய்ய இயலாதுபோனால் வாராந்தச் சந்தையில் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டு சேகரிக்கப்பட்ட பணமாயின் அடுத்த வேலைநாளொன்றில் தெரணியகல பிரதேச சபை பொது நிதியில் வைப்புச் செய்யப்பட வேண்டும்.

33. வாராந்தச் சந்தையில் கடையறை அல்லது வியாபாரத் தட்டு பாவிப்பதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு யாராவது நபரொருவருக்கு அனுமதிப்பத்திரம் விநியோகிப்பதற்கும் அதன்பொருட்டுப் பணம் வசூலிப்பதற்கும் 32 ஆவது இடைக்கால விதிகளில் விதிக்கப்பட்டிருக்கும் பிரகாரம் செயலாளரினால் அதிகாரம்பெற்ற எவரேனும் அதிகாரியொருவரை நியமிப்பதற்கு இயலாமற் போயின் அப்பணியை பிரசித்தமான கேள்விக்கோரல் மூலம் தெரிவுசெய்யப்படுகின்ற (இதன்பிறகு "கட்டணம் அறவிடுபவர்" எனப் பெயர் குறிப்பிடப்படுகின்ற) நபருக்கு வழங்குவதற்கு தெரணியகல பிரதேச சபைக்கு அதிகாரம் உண்டு.

34. 33 ஆவது இடைக்கால விதிகளின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட எவரேனும் கட்டணம் அறவிடுவதற்கு அப்பணியை ஒப்படைப்பது ஒரு வருடத்துக்கு மட்டும் செல்லுபடியாகும் என்பதோடு அடுத்த வருடத்துக்கென மீண்டும் கேள்விகோரல் மூலமாகக் கட்டணம் அறவிடுபவரைத் தெரிவுசெய்தல் வேண்டும். அவ்வாறு முன்னைய வருடத்துக்கெனத் தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்பட்ட கட்டணம் அறவிடும் எந்தவொரு நபருக்கேனும் அடுத்த வருடத்துக்கெனக் கேள்விப்பத்திர விண்ணப்பம் செய்வதற்கும் அந்தக் கேள்விப்பத்திர விண்ணப்பத்தைச் சபை ஏற்றுக்கொள்வதாயின் அவர் எதிர்வரும் வருடத்திற்கும் கட்டணம் அறவிடுபவராக தெரிவு செய்யப்படுவதற்கு இவ்விடைக்கால விதிகளின் ஏற்பாடுகளினூடாகத் தடைசெய்யப்பட்டுள்ளார் எனக் கருதப்படக்கூடாது.

35. (i) 33 ஆவது இடைக்கால விதியின் ஏற்பாட்டின் பிரகாரம் கட்டணம் அறவிடும் ஒருவரைத் தெரிவுசெய்யும்போது அவர்மூலம்,

(அ) தெரிவு செய்வதற்காகக் கேள்வி விண்ணப்பம் கோரப்படும்போது தெரணியகல பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ள பெறுமதியான மீளசெலுத்தப்படக்கூடியதும் மீளச் செலுத்தப்பட இயலாததுமான வைப்புப் பணத்தை தெரணியகல பிரதேச சபையில் வைப்பு செய்வதற்கு.

(ஆ) அனுமதிப்பத்திரம் விநியோகித்தலும் கட்டணம் அறவிடுதலும் தொடர்பாக தெரணியகல பிரதேச சபையுடன் உடன்படிக்கை செய்துகொள்வதற்கு.

(இ) பந்தி (ஆ) இனது கட்டளையின் கீழ் கையொப்பம் இடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள மாதாந்தக் கூலித்தொகையில் 03 மாதக் கூலித்தொகைக்குச் சமமான பணம் பாதுகாப்பு பிணை வைப்புப்பணமாக சபையில் வைப்புச் செய்தல் வேண்டும்.

(ஈ) 35 (i) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகளை அம்முறைப்படியே நிறைவுசெய்திருப்பின் மாத்திரமன்றி வேறு எவராயினும் ஒருவருக்கு தெரணியகல பிரதேச சபையின் மூலம் நடாத்திச் செல்லப்படும் யாதாயினும் வாராந்தச் சந்தையின் வியாபார நிலையத்தைப் பாவித்துக்கொள்ளும் நபரொருவருக்கான அனுமதிப்பத்திரத்தை விநியோகிப்பதற்கும் அவ்வனுமதிப் பத்திரத்தின் பொருட்டு கட்டணம் அறவிடுவதற்கும் இடமளிக்கக் கூடாது.

36. 22 ஆவது இடைக்கால விதிகளின் கட்டளையின் அடிப்படையில் யாதாயினும் ஒரு வாராந்தச் சந்தையின் வியாபார நிலையத்தைப் பாவித்துக்கொள்வதற்கு அல்லது பயன்படுத்திக் கொள்வதற்கு தெரணியகல பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்ட கட்டணத்தைவிட மேலதிகமான கட்டணத்தை அல்லது கட்டணங்களை அறவிடுவதற்கு எவராயினும் கட்டணம் அறவிடுபவரால் மேற்கொள்ளக்கூடாது.

37. 35 ஆவது இடைக்கால விதிகளின் 1 ஆம் பந்தியின் 'ஆ' உப பிரிவின் கட்டளைகளுக்கு அமைவாக எவராயினும் கட்டணம் அறவிடுபவரோடு தெரணியகல பிரதேச சபை ஒப்பமிட்டுக்கொள்ளும் உடன்படிக்கையில்,

(i) வியாபார நிலையத்தைப் பாவித்துக்கொள்ளும் பொருட்டு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் முறை.

(ii) அவ்வாறு அனுமதிப்பத்திரத்தின் பொருட்டு கட்டணம் அறவிடப்படும் முறையோடு அறவிடப்படும் அதிகபட்ச கட்டணத் தொகை.

(iii) கட்டணம் அறவிடுபவர் மூலம் உடன்படிக்கை செய்துக்கொள்ளும் வருடத்தின் பொருட்டு தெரணியகல பிரதேச சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய முழுத்தொகை.

(iv) ஒரு வருடத் தொகையானது சமமான 12 தவணை முறையில் தெரணியகல பிரதேச சபைக்குச் செலுத்தப்பட வேண்டியது பற்றியும் ஒரு தவணையின் கட்டணப்பெறுமதியும்.

(v) ஒவ்வொரு மாதத்தின் பொருட்டும் செலுத்தப்படவேண்டிய தொகையானது தெரணியகல பிரதேச சபைக்குச் செலுத்தப்படவேண்டிய திகதி.

(vi) குறிக்கப்பட்ட தினத்தில் மாதாந்தத் தவணைக்கட்டணம் செலுத்தத் தவறும் பட்சத்தில் அத்தொகையின் பத்து சதவீதத்திற்கு சமமான தொகை தாமதக் கட்டணமாக தெரணியகல பிரதேச சபைக்குச் செலுத்துவதற்குக் கட்டணம் அறவிடுபவர் உட்படுவாரென்பதாக.

(vii) உடன்படிக்கை செய்துக்கொள்ளும் சந்தர்ப்பங்களிலும் அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடுபவரால் மூன்று மாதத்துக்கான கூலித்தொகைக்குச் சமமான பாதுகாப்புப் பிணை வைப்புப் பணம் தெரணியகல பிரதேச சபையில் வைப்புச் செய்யப்படவேண்டும் என்பதாக

உடன்படிக்கை நிபந்தனைகள் உள்ளடக்கிக்கொள்வது தெரணியகல பிரதேச சபையின் பொறுப்பாகும்.

38.(i) கட்டணம் அறவிடுபவரால் தெரணியகல பிரதேச சபைக்குச் செலுத்தப்படவேண்டிய மாதாந்தக் கட்டணத்தைச் செலுத்தத் தவறும் பட்சத்திலும் அதன் மீதிக் கட்டணம் இரண்டு மாதாந்தக் கட்டணத்தைவிட அதிகமாகும் யாதேனும் ஒரு சந்தர்ப்பத்திலும் மேற்படி மீதிக் கட்டணத்தையும் தாமதப் பணத்தையும் செலுத்துமாறு கட்டணம் அறவிடுபவரிடம் எழுத்து மூலமான அறிவித்தல் வழங்குவது செயலாளரின் பொறுப்பாகும்.

(ii) *38 (i) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவித்தல் கிடைக்கப்பெற்ற எவரேனும் கட்டணம் அறவிடுபவரால் தமக்கு அவ்வகை அறிவித்தல் கிடைக்கப்பெற்றுள்ள தினத்திலிருந்து ஏழு தினங்களுக்குள் மேற்படி மீதிப் பணத்தையும் தாமதக் கட்டணத்தையும் தெரணியகல பிரதேச சபைக்கு செலுத்துவதற்கு இயலாது போகுமாயின் அவ்வறிவித்தல் அவருக்குக் கிடைக்கப்பெற்ற ஏழாவது தினத்துக்கு அடுத்த தினத்திலிருந்து மேற்படி கட்டணம் அறவிடுபவருடன் தெரணியகல பிரதேச சபை ஒப்பமிட்டுக்கொண்ட உடன்படிக்கை இரத்துச்செய்யப்படுவது சட்டரீதியானதாகும். அதேபோன்று அந்த உடன்படிக்கையானது இரத்துச் செய்யப்பட்டதாகக் கருதப்படும் தினத்திலேயே அந்தக்கட்டணம் அறவிடுபவருக்கு அது தொடர்பாக எழுத்துமூலம் அறிவித்தல் அனுப்புவது செயலாளரின் பொறுப்பாகும்.*

(iii) *38 (ii) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகளின் அடிப்படையில் இரத்துச் செய்யப்பட்ட தினத்துக்குப் பின்னர் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் உடன்படிக்கையின் பகுதியாளரான கட்டணம் அறவிடுபவரால் குறிப்பிட்ட வாராந்தச் சந்தையின் வியாபார நிலையத்தைப் பயன்படுத்துவதற்கும் பாவிப்பதற்கும் எந்தவொரு நபருக்கும் அனுமதிப்பத்திரம் வழங்குவதும், அனுமதிப்பத்திரம் வழங்குவதன் பொருட்டான கட்டணம் அறவிடுவதும் கூடாது.*

(iv) *38 (ii) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகளின் அடிப்படையில் யாதாயினும் உடன்படிக்கையொன்று இரத்துச் செய்யப்பட்ட தினத்துக்குப்பின் அடுத்த தினத்திலிருந்து வாராந்தச் சந்தை வியாபார நிலையத்தை பயன்படுத்துவதற்கும் பாவிப்பதற்கும் அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதற்கும் அவ்வனுமதிப்பத்திரம் தொடர்பாகக் கட்டணம் அறவிடப்படுதவற்கும் தெரணியகல பிரதேச சபையின் அதிகாரம்பெற்ற எவரேனும் அதிகாரியொருவரை நியமனம் செய்துகொள்வது செயலாளரின் பொறுப்பாகும். மேலும் அதிகாரம் பெற்ற ஒருவரால் அக்காரியம் நிறைவேற்றப்பட இயலாது எனச் செயலாளர் கருதுமிடத்து 34 ஆவது இடைக்கால விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகளுக்கு ஏற்பச் செயற்படுவதற்காக தனது கருத்துக்களைத் தலைவரின் மூலம் தெரணியகல பிரதேச சபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். இவ்விதமாகச் செயலாளரின் கருத்து சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் 34 ஆவது இடைக்கால விதிகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ள தெரணியகல பிரதேச சபையினால் தீர்மானம் மேற்கொள்ளப்பட இயலும். அவ்வாறு இல்லையாயின் சபையின் தலைவரினால் அதிகாரம் அளிக்கப்படுகின்ற அதிகாரியொருவரின் மூலம் வாராந்தச்சந்தையின் வியாபார நிலையங்களில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றவர்களிடமிருந்து அனுமதிப்பத்திரத்தின் பொருட்டு கட்டணங்களைப் பெறுதல் சட்டரீதியானதாகும்.*

*39. யாதாயினும் ஒரு வாராந்தச்சந்தை நடாத்தப்படும் தினங்களும் நேரங்களும் எவை என்பது பற்றி மும்மொழிகளிலுமான அறிவித்தல் அல்லது காட்சிப்படுத்தல் தெளிவாகத் தெரியும் வண்ணம் அவை வாராந்தச் சந்தையின் நுழைவாயிலின் அருகில் காட்சிப்படுத்தப்படுவதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.*

*40. தலைவர் அல்லது அதிகாரம் பெற்ற அதிகாரியினால் யாதாயினும் வாராந்தச் சந்தையொன்றில் விற்பனைக்கென வைக்கப்பட்டுள்ள அல்லது விற்பனைக்கெனக் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அல்லத சேமித்து வைக்கப்பட்டுள்ள ஏதேனும் உணவுப் பொருட்களிலிருந்து மாதிரியொன்றைப் பணம் செலுத்திப் பெற்றுக்கொள்வது சட்டரீதியாக அமையவேண்டுமே தவிர எவரொருவராலும் அவ்வாறு விலைக்கு வாங்குதலை ஆட்சேபித்தல் அல்லது இடையூறு செய்தல் கூடாது.*

*41. இப்பிரிவில் இடைக்கால விதிகளின் கட்டளைகளைப் பரிசீலனை செய்வதற்கு தலைவர் அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ள அதிகாரிக்கு பரிசீலனை செய்வதற்கென அதிகாரம் கிடைக்கும் காலஎல்லை என்பது யாதாயினும் வாராந்தச் சந்தையொன்று வியாபார நடவடிக்கைகளின் பொருட்டுத் திறந்து வைக்கப்பட்டிருக்கும் எந்தச் சந்தர்ப்பத்தையும் குறிக்கும்.*

*42. இந்த இடைக்கால விதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள யாதாயினும் கட்டளைகளை மீறுதல் குற்றமாவதொடு யாராயினும் நபரொருவர் உரிய நீதிமன்றம் ஒன்றினால் குற்றமொன்றுக்காக குற்றவாளியாக்கப்பட்டு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 122 (2) பிரிவிற்கு ஏற்ப தண்டனை வழங்கப்பட்டதற்குப் பின்னரும் அதே குற்றத்தினைத் தொடர்ந்தும் செய்துகொண்டிருப்பாரேயானால் அத்தகைய சட்டமீறல் தொடர்பாகக் கவனஞ் செலுத்தப்பட்டு பிரதேச சபையின் தலைவர் அல்லது செயலாளர் அல்லது அவர் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட வேறு அதிகாரியொருவரினால் எழுத்துமூல அறிவித்தல் வழங்கப்பட்டதன் பின்னரும் அதே குற்றத்தைச் செய்து கொண்டிருக்கின்ற தினங்கள் அனைத்துக்காகவும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 122 (2) பிரிவுக்கு ஏற்ப வழங்கப்பட வேண்டிய ஆகக்கூடிய தண்டனைக்கு உள்ளாக வேண்டும்.*

*43. சொற்கள் தொடர்பாக விளக்கம் தேவைப்படின் இப்பகுதியில் இடைக்கால விதிகளிலே,*

*(அ) "வாரச்சந்தை" எனப்படுவது, எல்லாவிதமான வியாபாரத்தின் பொருட்டும் அமைக்கப்பட்டுள்ள வியாபாரச் சூழலும் தத்தமது வீட்டுத்தோட்டத்திலோ வீட்டிலோ உற்பத்தியாக்கப்படும் மரக்கறிகள் அல்லது பழவகைகள் இவற்றுடன் வேறுபொருட்கள் அல்லது பண்டங்கள் விற்பதற்காக அமைக்கப்பட்டதும் தெரணியகல பிரதேச சபையால் அமைக்கப்பட்டு நடாத்தப்பட்டு வரும் ஒரு அமைவிடம் எனப் பொருள்படுவதோடு யாதாயினும் உற்பத்திப் பொருட்கள் தொகையாக விலைக்கு வாங்குதல் அல்லது விற்பனை செய்யும் இடம் எனவும் பொருள்படும்.*

(ஆ) ''உடன்படிக்கையாளர்'' எனப்படுவது தெரணியகல பிரதேச சபையுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையோடு யாதாயினும் ஒரு வாராந்தச் சந்தையில் ஏதாயினும் வியாபார நிலையமொன்றினை நடாத்திச் செல்கின்ற நபர் எனப் பொருள்படும்.

(இ) ''வியாபார நிலையம்'' எனப்படுவது எதாயினும் வாராந்தச் சந்தைக் கட்டடத்தினுள் நிலத்தில் வரைகோட்டு அடையாளம் வரையப்பட்டு வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு ஒதுக்கப்பட்டுள்ள ஏதாயினும் ஒரு இடம் பொருள்படும்.

:

**வாராந்தச் சந்தை வியாபார உரிமையினைக் குத்தகைக்கு விடுதல் தொடர்பான உடன்படிக்கைப் பத்திரம்**

ஒரு குழுவுக்கு (இதன் பின்னர்) சபைத்தலைவர் என அறிமுகப்படுத்தப்படும் தெரணியகல பிரதேச சபையின் தலைவர் ................. ............................ மற்றும் இதன் பின்னர் செயலாளர் என அறிமுகப்படுத்தப்படும் தெரணியகல பிரதேச சபையின் செயலாளர் ............. .................. எனப்படுபவர்களும் உள்ளடங்கலாக தெரணியகல பிரதேச சபையின் பொருட்டு தோன்றியிருக்கும் மற்றும் செயலாற்றும் தெரணியகல பிரதேச சபையின் தலைவர் மற்றும் செயலாளரும் மற்றைய குழுவினராக உடன்படிக்கையாளர் எனக் குறிப்பிடப்படும் ................................................... வசிக்கும் ............................................. என்பவருடன், ................. ஆம் வருடம் ..................... மாதம் .............. ஆம் திகதியில் தெரணியகல பிரதேச சபை அலுவலகத்தில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை பத்திரம்.

தெரணியகல பிரதேச சபைக்கு உரித்தான ................................ அமைந்திருக்கும் வாராந்த சந்தையில் ................ ஆம் இலக்கத்தினையுடைய வியாபார நிலையத்தில் ................................... வியாபாரம் செய்வதற்கென வியாபாரத்தளத்தினைப் பயன்படுத்தும் உரிமை இதன்பின்னர் குறித்துக் காட்டப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக உடன்படிக்கையாளருக்கு உரித்தாக்குவதற்கு தெரணியகல பிரதேச சபை உடன்படுகிறது. இதன்படி மிகவும் தெளிவாகக் காட்டப்படுவதும் விதிக்கப்படுவதுமான விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு உடன்படிக்கையாளரான ........................ என்பவரால் வியாபார நிலையத்தின் உரிமையாளரான தெரணியகல பிரதேச சபையுடன் இவ்வுடன்படிக்கை செய்துகொள்ளப்படுகிறது.

உடன்படிக்கையாளர் பகுதியினரிடமிருந்து வியாபார நிலைய உரிமையாளர் பகுதியினரான தெரணியகல பிரதேச சபைக்கு இலங்கையின் பாவனையிலுள்ள பண அலகில் ரூபா ........... தொகையினை உடன்படிக்கையாளர் பகுதியினரால் வியாபார நிலைய உரிமையாளர் பகுதியினருக்குச் செலுத்தப்பட வேண்டும். தெரணியகல பிரதேச சபைக்குரிய விதிமுறைகள், கட்டளைச்சட்டதிட்டங்கள், சட்டக் கோவைகள், இடைக்கால விதிகளோடு பிரதேச சபையினால் அடிக்கடி மேற்கொள்ளப்படும் தீர்மானங்களுக்கு உட்பட்டு மேற்படி வியாபாரத்தை நடாத்திச் செல்வதற்குரிய உரிமை .............ஆம் வருடம் ..................... மாதம் .............. ஆம் திகதியிலிருந்து ............... ஆம் வருடம் ............ மாதம் .................... ஆந் திகதி வரை ஒரு வருட காலத்துக்கு அனுபவிப்பதற்கென உடன்படிக்கையாளர் பகுதியினருக்கு உரித்தாகிறது. வியாபார நிலையம் உடன்படிக்கையின் இரு பகுதியினராலும் அவரவர் பின்பற்ற வேண்டிய பொறுப்புகள் கடமைகள் என்பன இதன்பின்னர் காட்டப்படுகின்ற முறைப்படி ஒப்புக்கொண்டதன் பின்னர் இவ்வுடன்படிக்கைக்குக் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

**நிபந்தனைகள் :**

1. தெரணியகல பிரதேச சபையினால் தீர்மானிக்கப்படும் திட்டங்களுக்கேற்ப வாராந்தச் சந்தை வியாபார நிலையம் வகைப்படுத்தப்படலும் ஏற்படுகின்ற எண்ணிக்கைக்கு ஏற்ப உடன்படிக்கையாளர் பகுதியினரான ........................ ஆகிய நான் இலக்கம் .................... இனையுடைய வியாபார நிலையத்தில் வியாபார நடவடிக்கைகளை 20 ........... ஆம் திகதியிலிருந்து ....................... ஆம் திகதி வரை நடாத்திச் செல்ல உடன்படுகிறேன்.

2. .............ஆம் வருடம் ..................... மாதம் .............. ஆந் திகதியிலிருந்து ..................... ஆம் வருடம் ..................... மாதம் .............. ஆந் திகதி வரை வாராந்தச் சந்தையில் வியாபார நிலையத்தின் பொருட்டு இடத்தை ஒதுக்கித் தருவது தொடர்பாக மீளப் பெற்றுக்கொள்ளாத ரூபா ............. தொகையினை உரிமையாளரான தெரணியகல பிரதேச சபைக்குச் செலுத்துவதற்கு உடன்படிக்கையாளர் பகுதியினர் என்ற வகையில் ....................................... ஆகிய நான் உடன்படுகிறேன்.

3. ........... ஆகிய இலக்கத்தினையுடைய வியாபார நிலையத்தின் பொருட்டு செலுத்தப்பட வேண்டிய நாளாந்த பற்றுச்சீட்டுக் கட்டணத்தை இவ்வுடன்படிக்கையின் விதிமுறைகளை மீறுவதற்கான காரணமாகக் கருதி தெரணியகல பிரதேச சபையிடம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் நிராகரிக்கப்படும் உடன்படிக்கையாளரின் சுயவிருப்பின் பேரில் நிராகரித்துக்கொள்ளும் வரையும் வாராந்த சந்தை வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் ஒவ்வொரு நாளுக்கும் ரூபா ......... இனை பிரதேச சபைக்குச் செலுத்துதல் வேண்டும்.

4. வருடத்திற்கு ஒரு முறை அல்லது பிரதேச சபை தேவை எனக் கருதும் வேறு எந்தவொரு சந்தர்பபத்திலும் நாளாந்த பற்றுச்சீட்டுக் கட்டணம் அல்லது மீளப்பெற்றுக்கொள்ளப்படாத ஒரே தடவையில் செலுத்தப்படவேண்டிய வியாபார நிலைய ஒதுக்கீடு செய்யும் கட்டணம் மீளாய்வு செய்வதற்கு பிரதேச சபைக்கு அதிகாரமுண்டு. தெரணியகல பிரதேச சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற திகதியிலிருந்து அவ்வாறு மீளாய்வுக்குட்படும் நாளாந்த பற்றுச்சீட்டுக் கட்டணத்தைச் செலுத்துவதற்கு உடன்படிக்கையாளர் பகுதியினர் உடன்படுதல் வேண்டும்.

5. வியாபாரத்தில் ஈடுபடும் தினத்தில் பற்றுச்சீட்டுக் கட்டணத்தை செலுத்தாத ஒதுக்கித் தரப்பட்ட வியாபார நிலையத்தில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் எந்தவொரு நபரையும் வியாபார நிலையத்திலிருந்து வெளியேற்றுவதற்கு தெரணியகல பிரதேச சபை நடவடிக்கை மேற்கொள்ளும்.

6. உடன்படிக்கையாளருக்கு அந்த வியாபார நிலையத்தில் செய்துகொள்ள அனுமதிக்கப்பட்ட யாதேனும் ஒரு வியாபாரம் அல்லது வியாபார நடவடிக்கைகளைத் தவிர வேறு நடவடிக்கையினை உடன்படிக்கையாளர் நடாத்திச் செல்லாதிருக்க வேண்டும்.

7. உடன்படிக்கையாளருக்கு தேவையேற்படின் ஒரு மாத கால அவகாசத்தின் பின் உடன்படிக்கையினை இரத்து செய்துகொள்ள இயலுவதோடு, அவ்வாறு உடன்படிக்கையினை இரத்துச்செய்யும்போது உடன்படிக்கையை இரத்துச்செய்துகொள்ளும் காலம்வரை சபையிடம் செலுத்தப்பட்டுள்ள எவ்வகைப் பணத்தையும் மீளக்கோரும் உரிமை உடன்படிக்கையாளர் பகுதியினருக்கு இல்லை. வியாபார நிலையத்தை ஒதுக்கித் தரும்போது ஒரே தடவையில் செலுத்தப்பட்ட பணமானது உடன்படிக்கையை இரத்துச் செய்யும் பொருட்டு எவ்வகை இடையூறு அல்லது பலவந்தத்துக்கு உட்படாதிருக்க வேண்டுவதோடு, அவ்வாறு உடன்படிக்கையை செல்லுபடியாற்றதாக்கும் சந்தர்ப்பத்தில் உடன்படிக்கையாளரினால் செலுத்தப்பட்ட பணத்தினை மீளத்தருமாறு கேட்டுக் கொள்வதற்கு உடன்படிக்கையாளருக்கு உரிமையில்லை.

8. உடன்படிக்கையாளர் அவருடைய பிரதிநிதி அல்லது சேவகரால் வேண்டுமென்றோ அல்லது சுயநலங்கருதியோ அக்கறையின்மையின் காரணமாக தான் உடன்படிக்கை மூலம் ஒதுக்கிக்கொண்ட வியாபார நிலையத்தினுள் அல்லது உடன்படிக்கையாளரின் பாவனையின் பொருட்டு வியாபார நிலையத்திற்கு வெளியே பொதுச் சந்தையில் பொருத்தப்பட்டுள்ள மின்சார, நீர் உபகரணங்கள் இணைக்கப்பட்டுள்ள கம்பி வலைகள், கதவுகள், யன்னல்கள், வாயிற்கதவு போன்ற பிரதேச சபைக்குச் சொந்தமான சொத்துகளுக்கு நட்டம் அல்லது ஊறு விளைவிக்கக் கூடாது. மேலும், உடன்படிக்கையாளரின் உடன்படிக்கை நிறைவுபெறும்போது உடன்படிக்கையாளரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட உபகரணங்களை அகற்றிச்செல்லும் போது சபையினுடைய ஏதேனும் சொத்துகளுக்கு அக்கறையின்மை காரணமாக ஏதாயினும் வகையில் நட்டம் ஏற்படுவதற்கு இடமளித்தல் ஆகாது. அவ்வாறு சேதம் விளைவிக்கப்பட்டிருந்தால் தெரணியகல பிரதேச சபையின் அதிகாரிகளினால் அச்சேதம் தொடர்பாக கணிக்கப்படும் இழப்பீட்டுத் தொகையை தெரணியகல பிரதேச சபைக்குச் செலுத்துமாறு கட்டளையிடப்பட்ட உடனே குத்தகைக்காரரினால் செலுத்தப்பட வேண்டும். உடன்படிக்கையாளருக்குச் சொந்தமான பொருட்கள் அல்லது உபகரணங்களுக்கு எவ்விதத்திலேனும் ஏற்படுகின்ற நட்டம் அல்லது சேதங்களுக்கு சபையானது வகைகூறமாட்டாது.

9. உடன்படிக்கையாளர் வியாபார நிலையத்தில் ஏதாவதொரு பகுதியை மற்றொருவருக்கு விற்றல், அல்லது வழங்குதல் அல்லது இடைக்குத்தகைக்கு விடுதல் அல்லது சபையின் அனுமதியின்றி அதிலிருந்து விலகுதல் செய்யத் தகாததாகும். உடன்படிக்கையாளரினால் வியாபார நிலையத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற வியாபாரத்தை அல்லது அதன் பகுதியை விற்றல் அல்லது கைமாற்றுதல் பங்கு வியாபாரமாக மாற்றியமைத்தல் அல்லது அடகுவைத்தல் என்பன செய்யப்படக்கூடாததாகும்.

10. சபைத்தலைவர் அல்லது அவரது அதிகாரம்பெற்ற அதிகாரிக்கு அல்லது சேவையாளர்களுக்கு வியாபார நிலையத்திற்குள் நுழைவதற்கு உடன்படிக்கையாளரினால் இடமளிக்கப்பட வேண்டுவதோடு அதன்பொருட்டு வேண்டிய வசதிகள் அனைத்தும் செய்து தரப்படுதல் வேண்டும்.

11. உடன்படிக்கையாளரினால் இவ்வியாபார நிலையத்தில் அல்லது பொதுச் சந்தையில் ஏதாவதொரு பகுதியில் ஆக்கபூர்வமான அல்லது வேறு வகையிலான வேறுபடுத்துதல் எந்த வகையிலும் செய்யப்பட இயலாததோடு சபைத்தலைவரினது முன்னறிவித்தல் அனுமதியைப் பெற்றுக்கொள்ளாது உடன்படிக்கையாளரினால் நிரந்தர அன்றித் தற்காலிக இணைப்பினையோ மின்ஒட்டு ஆகியன பொருத்துவதையோ அல்லது நிர்மாணிப்பதையோ செய்தல் கூடாது.

12. வியாபார நிலையத்தைச் சுத்தமாகவும் ஆரோக்கியத்துக்கு ஏற்ற வகையில் அமைத்துக்கொள்வது அவசியமாகும். தெரணியகல பிரதேச சபையின் அதிகாரிகளின் சிந்தனைக்கு ஏற்ற வகையில் உபகரணங்களும் பாத்திரங்களும் உடன்படிக்கையாளரினால் தமது வியாபார வளவினுள் விநியோகித்து வைத்திருத்தல் வேண்டும்.

13. உடன்படிக்கையாளரினால் நீர்வழங்கலுக்கு அல்லது கழிவுநீர் வடிகால்களுக்கு தடங்கல் ஏற்படும் விதத்தில் வடிகால்கள் அல்லது நீர்த்தொட்டிகளுக்கு அல்லது வேறு பாத்திரங்களுக்கு அல்லது நீர்வழிந்தோடும் முறைமைக்கு தடையேற்படும் விதத்தில் ஏதாவது பொருட்களை வீசுதல் அல்லது கொட்டப்படுதல் கூடாது.

14. குப்பை கூளங்கள் அல்லது உதிரிப் பொருட்களைக் கொட்டுவதற்குப் பொருத்தமான இடத்திலன்றி வேறு இடங்களில் வீசுதல் அல்லது கொட்டுதலைச் செய்தல் கூடாது.

15. ஏதேனும் ஒரு விற்பனை நிலையத்தில் உட்புறத்திலேயோ அல்லது வெளிப்புறத்திலேயோ சுவர்களில், காண்களில் பிரசார விளம்பரங்கள், அறிவித்தல் போஸ்டர்கள் ஒட்டுதல் அல்லது பொருத்துதல் செய்யப்படக்கூடாது. ஏதாவதொரு வியாபாரத்துக்கு அல்லது வர்த்தகத்திற்குரிய அடையாளப் பெயர்ப்பலகைகள் அல்லது வேறு காட்சிப்பலகைகளாயினும் தெரணியகல பிரதேச சபையின் தலைவரினால் அனுமதி பெறப்பட்ட இடங்களிலும் அனுமதிக்கப்பட்ட விதத்திலும் மட்டுமே அவை ஒட்டப்பட்டுக் காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

16. உடன்படிக்கையாளரினால் ஏதாவதொரு உபகரணம் அல்லது பொருள் போன்றவற்றைத் தமது வியாபார நிலையக் கூரையின்மீது வைத்தல் கூடாது.

17. ஏதாவதொரு விற்பனை நிலையத்தின் எல்லைக்கு வெளியே செல்லும் வகையில் எந்தவொரு பொருட்களையோ உபகரணங்களையோ குவித்து வைத்தல் அல்லது சேகரித்து வைத்தல் கூடாது. வாகனங்களில் ஏற்றிக்கொண்டுவரப்படும் பொருட்கள் அல்லது பண்டங்களை வியாபார நிலையத்திற்கு வேளைக்கே கொண்டுவரப்படுதல் வேண்டும்.

18. நியாயமான முறையில் கால எல்லைக்கு மேலதிகமாக வியாபார நிலையத்துக்கு பண்டங்கள் அல்லது பொருட்டுகளை ஏற்றியிறக்கும் வாகனங்களை வாராந்தச் சந்தை வளவினுள் நிறுத்தி வைத்திருத்தல் அல்லது நிறுத்தி வைப்பதற்கு இடமளித்தல் கூடாது.

19. வாராந்தச்சந்தை நடாத்தப்படும் தினத்துக்கு முன் தினம் பி. ப. 3.00 மணி முதல் வாராந்தச்சந்தை நடாத்தப்படும் தினத்திற்கு அடுத்த தினம் மு. ப. 9.00 மணி வரை சந்தைவளவு திறந்து வைக்கப்படுவதோடு அந்த நேரத்துக்குள் அன்றி வேறு நேரங்களில் உடன்படிக்கையாளர்களுக்கும் அவர்களது ஊழியர்கள் எவருக்காயினும் வியாபார நிலையத்தில் அல்லது வியாபார வளவுக் கட்டடங்களில் தங்கியிருக்க உரிமையில்லை.

20. உடன்படிக்கையாளர் அல்லது அவரது ஊழியர் எந்தவித துரதிஷ்ட அல்லது தொற்று நோயினால் பீடிக்கப்பட்டவர் என சந்தேகிக்கப்படுமிடத்து உரிய வைத்திய பரிசோதனைக்கு முன்வருதல் அல்லது ஊழியரை முன்வரச் செய்யவேண்டுடியதோடு சபையின் அதிகாரம் பெற்ற அதிகாரியினால் வைத்திய அறிக்கையினைச் சமர்ப்பிக்குமாறு அறிவித்தல் வழங்கப்பட்ட உடனடியாக அதற்கான அறிக்கை ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். உடன்படிக்கையாளர் தொற்று நோயினால் அல்லது துரதிஷ்ட நோயினால் பீடிக்கப்பட்டவிடத்து வியாபார நிலையத்தில் எந்தவொரு நடவடிக்கைகளிலும் பங்குகொள்ளாது இருப்பதோடு அவ்வகை நோயினால் பீடிக்கப்பட்ட ஊழியரையும் வேலையில் ஈடுபடுத்தாது இருத்தல் வேண்டும்.

21. வாராந்தச் சந்தைக் கடையினுள் போதைப் பொருள் அல்லது மதுபானம் போன்ற பொருட்கள் விற்பனை செய்வது அவ்வகைப் பொருட்களைப் பாவிப்பது அல்லது அரச சட்டங்களினால் தடைசெய்யப்பட்ட ஏதாவது காரியங்களில் ஈடுபடுவது அல்லது அதன்பொருட்டு எவராவது ஒருவருக்கு இடமளிப்பது அல்லது தானே கடை அறையினுள் மதுபோதையில் நடமாடுவது சூது விளையாட்டு போன்றவற்றில் ஈடுபடாது இருப்பதோடு அவ்வகைச் செயல்கள் கடையறையினுள் நடைபெற எவருக்கும் இடமளியாதிருத்தல் வேண்டும். மேலும் கடையறையினுள் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட எவருக்கும் இடமளியாதிருத்தல் வேண்டும்.

22. உடன்படிக்கையாளர் அவரின் பிரதிநிதிகள் அல்லது ஊழியர்களால் மேற்படி உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விதிமுறைகள் தெரணியகல பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது வாராந்தச் சந்தை தொடர்பான இடைக்கால விதிகளினதும் எதிர்காலத்தில் முன்வைக்கப்படவுள்ள இடைக்கால விதிகள் வேறும் சட்டதிட்டங்களால் முன்மொழியப்படுகின்ற விதிமுறைகளை மீறாதிருக்க வேண்டுவதோடு அத்தகைய விதிமுறைகளை மீறுமிடத்து அந்த உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டு குத்தகைக்காரரின் குத்தகை உரிமையும் இரத்துச் செய்யப்பட்டு குறிப்பிட்ட வியாபார நிலையமும் பொறுப்பேற்றுக்கொள்வதற்கு ஏதுவாயமையும்.

23. மேற்படி கடையறைக்குரிய உடன்படிக்கை நடைமுறையில் இருக்கும் காலத்தின்போது குத்தகை செலுத்துபவர் இறக்க நேரிட்டால் இவ்வுடன்படிக்கையை இரத்துச் செய்யும் முழு உரிமையும் தெரணியகல பிரதேச சபைக்கு உரியதாகும். குத்தகை செலுத்துபவர் இறக்கும் சந்தர்ப்பத்தில் அவரால் தெரணியகல பிரதேச சபைக் காரியாலயத்தில் செலுத்தப்பட்டிருக்கும் பிணைப்பணத்தில் பிரதேச சபைக்கு ஏதாவது பணம் செலுத்தப்படவேண்டியிருப்பின் அப்பணத்தைக் கழித்துக்கொண்டு மீதிப்பணத்தை குத்தகை செலுத்துபவரின் சட்டபூர்வ உரித்தாளரிடம் ஒப்படைக்கப்படும். வைப்புச் செய்யப்படவேண்டிய உரிய பிணைப்பணம் தெரணியகல பிரதேச சபைக் காரியாலயத்தில் செலுத்தப்பட்ட பின்னர் அந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் நடைமுறைப்படுத்தப்படுவதான உடன்படிக்கைப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டதன் பின்னர் மேற்படி கடையறையில் வியாபாரம் நடாத்திச்செல்லும் பொருட்டு இறந்துபோன குத்தகை செலுத்துபவரின் கணவன்/மனைவி/பிள்ளையினால் கோரப்படுமிடத்து அவருக்கு இறந்துபோன குத்தகை செலுத்தபவரின் பொருட்டு அந்தக் கடையறையில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு செல்வதற்கு அனுமதி அல்லது அதிகாரம் வழங்குவதற்குரிய முழு உரிமையும் தெரணியகல பிரதேச சபைக்கு உரியதாகும்.

24. இதில் கையொப்பம் இட்டுள்ள பகுதியினருக்கிடையே ஏதாவது கருத்து வேறுபாடுகள் அல்லது எதிர்ப்புகள் ஏற்பட்டிருப்பின் அந்தக் கருத்து முரண்பாடுகள் அல்லது எதிர்ப்புகளை ................. உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரிடம் அறிவிக்க வேண்டுமே தவிர இங்கு இதன்பிறகு குறிப்பிடப்படும் பிரகாரம் எந்தப் பகுதிக்காரரின் மூலமாகவும் அது தொடர்பாக இணக்கம் செய்யும் தீர்ப்புக்கெனக் கோரிக்கை விடப்பட்டு இருந்தால் மட்டுமே அல்லாமல் அவர்களது தீர்ப்பு இறுதித் தீர்ப்பாகும். எனினும் அச் செயலாளரின் தீர்ப்பானது ஏதாவதொரு பகுதியினருக்கு அறியத்தரப்பட்ட தினத்திலிருந்து 7 நாட்களுக்குள் பகுதியாளரினால் எழுத்துமூலமாக அவ்வாறு கேட்கப்பட்டிருந்தால் அந்தச் செயலாளரினால் கருத்து முரண்பாட்டிற்கு ஏதுவான காரணங்கள் தொடர்பாக விசாரணை செய்யப்பட்டுத் தீர்ப்பு வழங்கி பொருத்தமானவர் நியமிக்கப்படுவார். 1905 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இணக்கம் ஏற்படுத்தும் சட்டம் இந்த விடயத்தில் பொருத்தமானதாகக் கருதப்படும். சட்டம் தொடர்பானது எனினும் பிரச்சினை தொடர்பானது எனினும் குறிக்கப்பட்டவர்களின் தீர்மானம் அன்றியும் தீர்ப்பு இறுதித் தீர்மானம் அன்றியும் தீர்ப்பாகும். இதில் குறிக்கப்பட்ட பகுதியினரால் தீர்மானம் அல்லது தீரப்பினை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

................. ஆம் வருடம் ............. மாதம் .................. ஆந் திகதி ................. குறிக்கப்பட்ட பகுதியினரால் பின்வரும் சாட்சிக்காரர்களின் முன்னிலையில் இந்த உடன்படிக்கைப் பத்திரத்தில் அவர்களது ஒப்பம் இடப்பட்டது.

| ----, | ----, | ----, |
|---|---|---|
| தலைவர் | செயலாளர் | உடன்படிக்கையாளர் |
| தெரணியகல பிரதேச சபை | தெரணியகல பிரதேச சபை | தெரணியகல பிரதேச சபை |

சாட்சிகள் :

1. கையொப்பம் :------. தே. அ. அ. இல. :------.
பெயரும் முகவரியும் :------

2. கையொப்பம் :------. தே. அ. அ. இல. :------.
பெயரும் முகவரியும் :------.

**இரண்டாம் அட்டவணை**

**கட்டணம் அறவிடுவதற்கான பற்றுச்சீட்டு**

**தெரணியகல பிரதேச சபை**

தெரணியகல ஞாயிறு வாராந்தச் சந்தை வியாபார நிலையம்/வியாபாரத் தட்டு பாவனையின் பொருட்டான பற்றுச்சீட்டு

பெயர் :-----.
வியாபார நிலையம் அல்லது வியாபாரத் தட்டுப் பாவனையாளர்
தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
வியாபார நிலையம்/வியாபாரத் தட்டு இலக்கமம் :-----.
வியாபாரத்தின் வகை :-----.
அறவிடப்படும் கட்டணம் :-----.

| ----, | ----, |
|---|---|
| வழங்கப்பட்ட திகதி | வழங்கிய அலுவலர். |

**மூன்றாம் அட்டவணை**

**கட்டணம் அட்டவணை**

| வியாபார நிலையத்தின் தன்மை | நாளொன்றுக்கான கட்டணம் ரூபா ச. |
|---|---|
| ஒதுக்கப்பட்ட நிலையத்தின் பொருட்டு (நிலையான கடை அறையின் பொருட்டு) | |
| வாராந்த சந்தை ஒழுங்கமைப்புக்கு ஏற்ப கடை அறை இல. : 1-4 வரை, 11-18 வரை, 29-97 வரை, 114-151 வரை, 182-240 வரை | 200 0 |
| கடை அறை இல.: 5-10 வரை, 19-28 வரை. 98-113 வரை, 152-181 வரை, 241-245 வரை | 100 0 |
| சிற்றுண்டிச்சாலை | 250 0 |
| நடமாடும் வியாபாரம் | |
| நடமாடும் வியாபாரம் (வாகனம்) | 100 0 |
| நடமாடும் வியாபாரம் (தனியாள்) | 30 0 |
| நடைபாதை வியாபாரம் | |
| மீன் தட்டு | 250 0 |
| நடைபாதை வியாபாரம் | 50 0 |

**இம்புல்பே பிரதேச சபை**

**துணைவிதிகள்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 மற்றும் 126 ஆம் பிரிவுகளின் மூலம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் நிருவாக அதிகாரப் பிரதேசத்தின் இம்புல்பே பிரதேச சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள, கீழ்க்குறிப்பிடப்பட்ட துணைவிதி, பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சராகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டது என்பதை இத்தால் பிரகடனம் செய்யப்படுகின்றது.*

*மஹீபால ஹேரத்,*
*உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சர்,*
*சப்பிரகமுவ மாகாணம்.*

*சப்பிரகமுவ மாகாண மாகாண சபை அலுவலகம்,*
*மாவனல்லை,*
*2015, நவெம்பர் 26.*

*1. இவ் இடைக்கால சட்டதிட்டங்கள் இம்புல்பே பிரதேச சபையின் பொதுமக்கள் புத்தகசாலையை மேம்படுத்தல், மேற்பார்வையிடல் மற்றும் பரிபாலனம் செய்தல் தொடர்பான இடைக்கால சட்டதிட்டங்கள் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*2. இம்புல்பே பிரதேச சபைக்கு உரிய பிரதேசத்தினுள் வாழுகின்ற ஒவ்வொரு நபருக்கும் கல்வி, அபிவிருத்தி, வாசிப்பு ரசனையை மேம்படுத்தல், தனிமனித வினைத்திறன் மற்றும் ஆளுமையை அதிகரித்தல், வினோதம் மற்றும் நிர்மாண திறனுக்கான தேவையை நிவர்த்தி செய்தல் தொடர்பாக பல்வேறுபட்ட வளங்கள் மற்றும் சேவைகளை வழங்குதல் மூலமாக பொதுமக்கள் புத்தகசாலையின் சேவையினை மேம்படுத்தி பரிபாலனம் செய்தலுக்காக இம்புல்பே பிரதேச சபையின் மூலம் இவ் இடைக்கால சட்டதிட்டங்கள் அமுலுக்கு கொண்டு வரப்படும்.*

*3. இம்புல்பே பிரதேச சபையின் பொதுமக்கள் புத்தகசாலை கீழ் குறிப்பிடப்பட்ட பிரிவு மற்றும் சேவைக்கேற்ப வகைப்படுத்தப்பட்டுள்ளது.*

(i) *வெளியே கொடுத்தல் பிரிவு*
(ii) *விமர்சனப் பிரிவு*
(iii) *சிறுவர் பிரிவு*
(iv) *வார இதழ் மற்றும் பத்திரிகை பிரிவு*
(v) *விசேட சேகரிப்பு மற்றும் பிரதேச சேகரிப்பு*
(vi) *மக்கள் தகவல் சேவை*
(vii) *பிரதி எடுத்தல் சேவை*
(viii) *பார்த்தல், கேட்டல் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை*
(ix) *வலைத்தளம் வசதியளிப்பு சேவை*
(x) *இலத்திரனியல் புத்தகசாலை சேவை*

*4. இம்புல்பே பிரதேச சபையின் பொதுமக்கள் புத்தகசாலை தொடர்பாக புத்தகசாலை அதிகாரி ஒருவர் இருப்பதோடு, அவ்வாறு நியமிக்கப்படும் நபர் பொதுமக்கள் புத்தகசாலை சங்கம் மற்றும் முகாமைத்துவத்தை முறைப்படி தொடர்ந்து செல்வது சம்பந்தமாக பிரதேச சபைக்கு பொறுப்பு கூறவேண்டும்.*

*5. பொதுமக்கள் புத்தகசாலை மேற்பார்வையிடல் மற்றும் சாதாரணமாக பரிபாலனம் செய்தல் தொடர்பாக (இங்கு இதன்பின்னர் புத்தகசாலை சங்கம் என குறிப்பிடப்பட்டுள்ள) புத்தகசாலை ஆலோசனை நிர்வாக சபைக்கு பொறுப்பளிக்கப்படுகின்றது.*

(i) *இந்நிருவாக சபை பிரதேச சபையினால் வருடந்தோரும் நியமிக்கப்படும். அதன் போது கீழ் குறிப்பிடப்படும் நபர்கள் பங்கு கொள்ள வேண்டும் :*

(a) *பிரதேச சபையின் கௌரவ தலைவர் ;*
(b) *பிரதேச சபையின் கௌரவ மந்திரிகளுள் தெரிவு செய்யப்படும் மூவருக்கு மேற்படாத அங்கத்தவர் தொகை ;*
(c) *பிரதேச சபை அதிகார பிரதேச மக்களின் சமய அடிப்படையிலான ஒரு அங்கத்தவர் வீதம்;*
(d) *பிரதேச சபையினால் நியமிக்கப்படும் பிரதேச சபைக்கு உரிய பிரதேசத்தினுள் வாழுகின்ற விசேடமான நபர்கள் மூவருக்கு மேற்படாத அங்கத்தவர் தொகை;*
(e) *பிரதேச சபையின் செயலாளர்;*
(f) *மக்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்;*
(g) *பிரதேச சபையின் பிரதான புத்தகசாலையின் புத்தகசாலை அதிகாரி;*
(h) *உரிய பிரதேசத்தினுள் பிரதான பாடசாலையொன்றின் அதிபரொருவர்;*
(i) *உரிய பிரதேசத்தினுள் மக்கள் கூட்டத்தின் பிரதிநிதியொருவர்.*

(ii) பிரதேச சபையின் கௌரவ தலைவர் சங்கத்தின் பலம் மிக்க தலைவராவதோடு, சங்கத்தின் அனைத்து கூட்டத்திலும் முதன்மை வகிக்க வேண்டும். ஏதேனுமொரு கூட்டத்திற்கு தலைவரால் சமுகமளிக்க முடியாதவிடத்து வருகை தந்திருக்கும் அங்கத்தவர்களுக்கிடையில் தெரிவு செய்யப்படும் அங்கத்தவர் அக்கூட்டத்தின் முதன்மை இடத்தை வகிக்க வேண்டும். புத்தகசாலை அதிகாரி கூட்டத்தின் செயலாளர் பதவி வகிக்க வேண்டும்;

(iii) பிரதேச சபையின் செயலாளர் அழைப்பாளராக செயற்பட வேண்டும்;

(iv) கூட்டநடப்பெண் அங்கத்தவர்களின் தொகையின் மூன்றில் ஒன்றாக இருத்தல் வேண்டும்;

(v) யாரேனும் அல்லது கூட்டத்தின் முதன்மை இடத்தை வகிக்கும் அங்கத்தவருக்கு ஒர பிரதான வாக்கெடுப்போ, ஏதேனுமொரு பிரச்சினை தொடர்பாக கட்சி மற்றும் எதிர்க்கட்சி வாக்கு தொகை சமமாக இருப்பின் கடுமையான வாக்கெடுப்பு நடைபெறும்.

**6. அங்கத்துவம் பெற்றுக் கொள்ளல்**

(i) புத்தகசாலை சேவையினை ஏற்றுக்கொள்ளும் அனைத்து நபர்களும் சபையினால் ஏற்கனவே தருவிக்கப்பட்ட முன்மொழிதல்களுக்கு அமைய நியமிக்கப்பட்ட கட்டணத்தை செலுத்திவிட்டு புத்தகசாலை அதிகாரியிடம் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப்படிவத்தின் மூலம் அங்கத்துவத்தை வேண்டிக் கொள்வதோடு அவ்விண்ணப்பப் படிவம் இங்கு கீழ் குறிப்பிடப்பட்ட யாரேனும் ஒரு நபரிடம் சான்றுபடுத்திக் கொள்ள வேண்டும்.

A. வசிக்கும் பிரதேசத்தின் கிராம அலுவலர் ;
B. சமாதான நீதவான் ;
C. பிரதேச சபையின் கௌரவ மந்திரிகளிலொருவர் ;
D. அரச அலுவலர் அல்லது மாகாண அரச சேவை நிர்வாக அதிகாரியொருவர் ;
E. பாடசாலை விண்ணப்பதாரியாயின் அவர் கல்வி கற்கும் பாடசாலையின் அதிபர்/வகுப்பாசிரியர்.

(ii) புத்தகசாலை அங்கத்துவத்தை பெற்றுக்கொள்வது தொடர்பாக கீழ் குறிப்பிடப்பட்ட தகைமைகள் இருத்தல் அவசியம் அல்லது தொழில் செய்பவராக இருத்தல் வேண்டும்.

B. சிறுவர் அங்கத்துவம் தொடர்பாக ஐந்து வயதுக்கு மேற்பட்டவராக இருப்பதோடு பிரதேசத்தினுள் ஏதேனுமொரு பாடசாலையில் அல்லது பிரிவெனயில் கல்வி கற்பவராக இருத்தல் வேண்டும்.

(iii) **அங்கத்துவ கட்டணம்**

A. வருடாந்த அங்கத்துவ கட்டணம் சாதாரண அங்கத்தவர் தொடர்பாக 100 ரூபா ஆகும். ஆண்டுக்கொருமுறை 25 ரூபாவை செலுத்தி அங்கத்துவத்தை மீள புதுப்பித்துக் கொள்ள முடியும். வருடாந்த அங்கத்துவ கட்டணம் அடிக்கடி பிரதேச சபையின் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் கட்டணமாக இருத்தல் வேண்டும்.
B. சிறுவர் அங்கத்துவம் தொடர்பாக அங்கத்துவ பணம் 50 ரூபா ஆகும். ஆண்டுக்கொருமுறை 25 ரூபாவை செலுத்தி அங்கத்துவத்தை மீள புதுப்பித்துக் கொள்ள முடியும். (கூட்டத்தின் நிர்ணயித்தல் மூலம் பொதுச் சபையினால் ஏற்கனவே மேற்கொண்ட முன்மொழிதல்களுக்கமைய முன் மொழியப்பட்ட ஏதேனுமொரு தொகையை அங்கத்துவ கட்டணமாக மற்றும் அங்கத்துவத்தை மீள புதுப்பிக்கும் கட்டணமாக செலுத்த அடி பணிய வேண்டும்.)

(iv) **பிணையாளர்கள்**

A. சாதாரண அங்கத்துவம் தொடர்பாக பிணையாளராக இம்புல்பே பிரதேச சபைக்கு வரி கட்டணம் வாடகை செலுத்தும் நிரந்தரமாக வசிப்பவர் பிணையாளராக கையொப்பமிடலாம்;
B. சிறுவர் அங்கத்துவம் தொடர்பாக பிணையாளராக அவரின் தாய்/தந்தை/பாதுகாவலர் கையொப்பமிடலாம்.
C. உரிய பிரதேசத்தினுள் தொழில் செய்பவராயின் அவர் தொடர்பாக பிணையாளராக உரிய பிரதேசத்தினுள் நிரந்தரமாக வசிக்கும் வரி கட்டணம் வாடகை செலுத்துபவர் பிணையாளராக ஆகலாம்.

7. வெளியே கொடுத்தல் புத்தகசாலையின் அங்கத்தவருக்கு இரண்டு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படுவதோடு அங்கத்துவரால் எடுத்துச்செல்லப்படும் அனைத்து புத்தகம் தொடர்பாகவும் அங்கத்தவர் பொறுப்பு கூற வேண்டும்.

8. புத்தகசாலை அங்கத்தவர் ஒருவரினால் வெளியே எடுத்துச்செல்லப்படும் புத்தகம் அவர் அதை பெற்றுக்கொள்ளும் திகதியிலிருந்து 14 நாட்கள் கால எல்லைக்குள் புத்தகசாலை அதிகாரியிடம் மீள கையளிக்க வேண்டும்.

9. இவ் இடைக்கால சட்டதிட்டங்களில் 7 ஆவது சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி 14 நாட்கள் கால எல்லைக்குள் ஏதேனுமொரு புத்தகம் புத்தகசாலை அதிகாரியிடம் மீள கையளிக்காது தவிர்க்கும் பட்சத்தில் அப்புத்தகத்தை மீண்டும் கையளிக்கும் வரை கடந்து செல்லும் ஒவ்வொரு நாட்களுக்கும் ஒரு நாளைக்கு 1.00 ரூபா வீதம் தாமத கட்டணமாகவோ அல்லது நிர்வாக சபையின் நிர்ணயித்தல் மூலம் பொதுச் சபையினால் ஏற்கனவே மேற்கொண்ட முன்மொழிதல்களுக்கமைய முன் மொழியப்பட்ட ஏதேனுமொரு கட்டணம் தாமத கட்டணமாகவோ செலுத்த அடி பணிய வேண்டும்.

*10.* வெளியே எடுத்துச்செல்லப்படும் புத்தகம் 14 நாட்கள் கால எல்லையை முடிந்த பின் 7 நாட்களுக்கு பின் அங்கத்தவருக்கு ஞாபகமூட்டல் கடிதம் 1 உம், பிணையாளருக்கு ஒரு சந்தர்ப்பமாக அறிவித்தல் கொடுப்பதோடு அது தொடர்பாக செலவிடப்படும் தொகை குறித்த அங்கத்தவரிடம் அல்லது பிணையாளரிடம் வசூலிக்கப்படும். அவ் அறிவித்தலை பெற்றுக்கொண்ட பின் அப்புத்தகத்தை கையளிக்க தவிர்க்கும் பட்சத்தில் அப்புத்தகம் காணாமல் போனதாக கருதப்படும்.

*11.* அவ்வாறு புத்தகம் காணாமல் போனதாக கருதப்படும் பட்சத்தில் அப்புத்தகத்தின் பெறுமதி மற்றும் மேலதிகமாக 25 வீதமும் சேவை கட்டணமாக, இடைக்கால சட்டதிட்டங்களில் 8 வீதமாக கூறப்பட்ட பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி தண்டப் பணம் குறித்த அங்கத்தவரால் அல்லது பிணையாளரால் செலுத்தப்பட வேண்டும். அங்கத்தவரினால் வெளியே எடுத்துச் செல்லப்படும் புத்தகத்திற்கு சிதைவுகளை ஏற்படுத்தலோ அல்லது ஏதேனும் முறைகளில் அழிவை உண்டாக்குதலோ செய்ய கூடாது.

*12.* வெளியே எடுத்துச்செல்வதற்காக தயாரான புத்தகத்திற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள சிதைவுகள் அல்லது அழிகுள் தொடர்பாக புத்தகசாலை அதிகாரியிடம் அறவித்தலானது எவரேனும் ஒரு அங்கத்தவரால் தவிர்க்கப்படும் சந்தர்ப்பத்தில் அப்புத்தகம் அங்கத்தவருக்கு சிதைவுகள் அல்லது அழிவுகள் அற்ற நிலையில் வழங்க உத்தேசிக்கப்பட வேண்டும்.

*13.* அங்கத்தவரால் மீள கையளிக்கப்படும் புத்தகம் மீண்டும் வழங்க தகுதியற்ற வண்ணம் சிதைவுகள் அல்லது அழிவுகள் ஏற்படுத்தப்பட்டு புத்தகசாலை அதிகாரி அது தொடர்பாக மனக் கிலேசத்திற்கு உள்ளாகும் போது, அப்புத்தகத்தை மீள ஒழுங்கமைப்பதற்கான செலவினை ஏற்றுக்கொள்ள குறித்த அங்கத்தவர் கட்டுப்பட்டவராவார். அப்புத்தகத்தை மீள ஒழங்கமைத்த பின் "சிதைந்த புத்தமாக எண்ணி விற்கப்படும்" என முத்திரை குத்தப்பட்டு அது அங்கத்தவருக்கு கையளிக்கப்படும்.

*14.* புத்தகசாலையில் பெற்றுக்கொள்ளப்படும் புத்தகம் எந்தவொரு அங்கத்தவராலும் அழிவுக்கு உள்ளாக்கப்பட கூடாது.

(i) மேற்குறித்த 13 ஆவது இடைக்கால சட்டதிட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வித விதமான குழறுபடிகளை மேற்கொள்ளும் எந்தவொரு அங்கத்தவரினதும் அங்கத்துவம் பறிக்கப்படும்.

(ii) அசாதாரண அல்லது ஸ்பரிச நோயினால் பீடிக்கப்பட்ட யாரேனுமொரு நபரால் பாவனை செய்யப்பட்டதாக தாம் அறிந்த எந்த புத்தகத்தையேனும் எந்தவொரு அங்கத்தவரினாலும் புத்தகசாலைக்கு மீள கையளிக்கப்பட கூடாது.

(iii) வெளியே எடுத்துச் செல்லப்படும் புத்தகம் அசாதாரண அல்லது ஸ்பரிச நோயினால் பீடிக்கப்பட்ட நபரால் பாவனை செய்யப்பட்டிருந்தால் அப்புத்தகம் அழிவுக்கு உட்படுத்தப்பட வேண்டியதோடு அதை மீண்டும் வழங்குவதற்கான செலவு அவ் அங்கத்தவரால் புத்தகசாலை அதிகாரியிடம் செலுத்தப்பட வேண்டும்.

(iv) புத்தகசாலை அதிகாரியிடம் கடிதம் மூலம் அறிவிக்க வேண்டும். புத்தகசாலையிலிருந்து புத்தகத்தை வெளியே எடுத்துச்செல்ல முடியாமையையிட்டு புத்தகசாலை அதிகாரி மனக்கிலேசத்திற்கு உள்ளாகும் போது, அவ் அங்கத்தவருக்கு தொடர் அங்கத்துவ அட்டை விநியோகிக்கப்படும்.

(v) அட்டை பத்திரம் தொலைந்து போனமை தொடர்பாக அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்கள் காலம் கடந்து முடிந்த பின் இப்புத்தகசாலை அதிகாரியினால் தொடர் அங்கத்துவ அட்டை பத்திரம் விநியோகிக்கப்பட மாட்டாது.

*15.* ஏதேனுமொரு புத்தகத்தைப் பெற்றுக்கொள்வது எந்த அங்கத்தவர் என்பது தொடர்பாக அங்கத்தவர்கள் இருவர் அல்லது அதற்கு மேற்பட்டோரிடம் ஏற்படும் பேதம் தொடர்பாக புத்தகசாலை அதிகாரியினால் தீர்ப்பு கூறப்படும்.

*16.* வெளியே எடுத்துச் செல்லப்படும் புத்தகம் அங்கத்தவரால் கேட்கப்படும் போது அது விநியோகிக்கப்படுவதோடு அது வரை அப்புத்தகம் விநியோகிக்கப்பட்டிருப்பின் வேண்டுபவரின் அல்லது வேண்டுபவர்களின் பெயர்கள் பட்டியலில் குறிக்கப்பட்டு அப்புத்தகம் புத்தகசாலைக்கு கிடைக்கப்பெற்ற பின் அந்நபருக்கு அப்புத்தகத்தை வழங்க புத்தகசாலை அதிகாரி நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

*17.* வெளியே கொடுத்தல் புத்தகசாலை ஞாயிற்றுக்கிழமை மற்றும் பொது விடுமுறை தினங்கள் உட்பட அங்கத்தவர்களுக்கு 7 நாட்கள் அறிவித்தல் கொடுத்ததன் பின் தொகையாக பெற்றுக்கொள்ளல் தொடர்பாக நிர்வாக சபையினால் குறிக்கப்பட்ட திகதியை தவிர ஏனைய நாட்கள் தினமும் மு. ப. 8.30 தொடக்கம் பி. ப. 4.15 வரையான காலப்பகுதி திறந்து வைக்கப்படும். ஆனாலும் நிர்வாக சபையின் நிர்ணயித்தல் மூலம் திறந்து வைக்கப்படும் தினம் மற்றும் நேரம் மாற்றப்படலாம்.

*18.* **விமர்சனப் பிரிவு**:

(i) புத்தகசாலை அதிகாரியின் அனுமதியுடன் விமர்சன பிரிவில் வைக்கப்பட்டிருக்கும் பட்டியலின் வேண்டுகோள் பத்திரத்தில் கையொப்பமிட்டு விமர்சன கையேடுகள் பரிசீலனை செய்யப்படும்.

(ii) வாசித்தல் தொடர்பாக தங்களிடம் விநியோகிக்கப்படும் அனைத்து புத்தகசாலை புத்தகம் வெளியீடு மற்றும் வேறு ஏதேனுமொன்றை விமர்சன பிரிவிலிருந்து வெளியே கொண்டு செல்வது தடை செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி நிழற்பிரதி சேவை செயற்படுமாயின் புத்தகசாலை அதிகாரியின் அனுமதி மற்றும் பாதுகாவலின் கீழ் அவ்வெளியீட்டின் தேவையான பக்கம் குறித்த தொகையை செலுத்தி நிழற் பிரதியை பெற்றுக்கொள்ள வேண்டுவருக்கு அது தொடர்பாக ஏற்பாடு மேற்கொள்ளப்படும்.

(iii) ஆலோசனை நிர்வாக சபையின் நிர்ணயித்தல் மூலம் சபை ஏற்கனவே மேற்கொண்ட முன்மொழிதல்களுக்கமைய நியமிக்கப்பட்ட ஏதேனுமொரு கட்டணத் தொகை இந்நிழற் பிரதி சேவை தொடர்பாக வசூல் செய்யப்படும்.

19. (i) கிழமை நாட்களில் மு. ப. 8.30 மணி தொடக்கம் பி. ப. 4.30 மணி வரை அல்லது நிர்வாக சபையின் நிர்ணயித்தல் மூலம் பொதுச் சபையினால் தீர்மானிக்கப்பட்ட திகதி மற்றும் நேரம் திறந்து வைக்கப்படும். வாசிப்பு கூடத்தினை பரிசீலனை செய்ய எவராலும் முடியும் என்பதோடு அது தொடர்பாக வாசிப்பு கூடத்தில் வைக்கப்பட்டிருக்கும் பட்டியலில் பெயர் மற்றும் வருகை தந்த நேரம் குறிக்கப்பட்டு கையொப்பமிட்டு வாசிப்பு கூடத்தின் சேவையினை பயன்படுத்திக்கொள்ள முடியும்.

(ii) வாசிப்பு கூடத்தில் வைக்கப்பட்டிருக்கும் அல்லது வாசிப்பு கூடத்திற்குரிய எந்தவொரு பத்திரிகைக்கோ அல்லது வார வெளியீட்டுக்கோ அல்லது வரைபடத்திற்கோ அல்லது வேறு புத்தகசாலை பொருட்களுக்கோ தீங்கு விளைவிக்கக் கூடாது.

**20. நிழற் பிரதி சேவை**

(i) நிழற்பிரதி சேவை செயற்படுமாயின் புத்தகசாலை அதிகாரியின் அனுமதி மற்றும் பாதுகாவலின் கீழ் அவ்வெளியீட்டின் தேவையான 3 பக்கங்கள் மட்டும் இலவசமாக நிழற்பிரதியை பெற்றுக்கொள்ள வேண்டி கேட்கும் யாரேனுமொரு நபருக்கு அது தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படும்.

(ii) ஆலோசனை நிர்வாக சபையின் நிர்ணயித்தல் மூலம் சபை ஏற்கனவே மேற்கொண்ட முன் மொழிதல்களுக்கமைய நியமிக்கப்பட்ட ஏதேனுமொரு தொகை இந் நிழற் பிரதி சேவை தொடர்பாக வசூல் செய்யப்படும்.

**21. பார்த்தல் கேட்டல் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை**

**1. வளைத்தளம் வசதியளிப்பு சேவை**

(i) புத்தகசாலை மூலம் பெற்றுக்கொடுக்கப்படும் இலத்திரனியல் புத்தகசாலை தொடர்பான விண்ணப்பப்படிவம் பூரணப்படுத்தி அங்கத்துவத்தை பெற்றுக்கொண்டு ஒரு நபருக்கு விரும்பிய கால எல்லைக்குள் வளைத்தளம் வசதியளிப்பு சேவையினை பெற்றுக்கொள்ள முடியும்.

(ii) வலைத்தளம் வசதியளிப்பு சேவை தொடர்பாக கட்டணமாக ஒரு மணித்தியாலத்திற்கு 40 ரூபா அறவிடப்படும். அத்தோடு நிர்வாக சபையின் நிர்ணயித்தல் மூலம் சபை ஏற்கனவே மேற்கொண்ட முன்மொழிதல்களுக்கமைய நியமிக்கப்பட்ட கட்டணத்தை மீள் பரிசீலனை செய்யும் உரிமை சங்கத்துக்குரியது.

**2. இலத்திரனியல் புத்தகசாலை சேவை**

(i) இலத்திரனியல் புத்தகசாலை தொடர்பான அங்கத்துவ விண்ணப்பப் படிவம் 10 ரூபா ஆக இருப்பதோடு மாதத்திற்கு ஒரு முறை 100 ரூபாவை செலுத்தி அங்கத்துவத்தை மீள புதுப்பித்துக் கொள்ளலாம். அத்தோடு நிர்வாக சபையின் நிர்ணயித்தல் மூலம் சபை ஏற்கனவே மேற்கொண்ட முன்மொழிதல்களுக்கமைய நியமிக்கப்பட்ட தொகை மீள் பரிசீலனை செய்யும் உரிமை சங்கத்துக்குரியது.

(ii) வாசிகசாலை திறந்திருக்கும் நாட்களில் மட்டும் அங்கத்தவரொருவருக்கு, 2 மணித்தியாலங்கள் இலத்திரனியல் புத்தகசாலை சேவை வழங்கப்படும்.

22. யாரெனுமொரு நபருக்கு

(i) இம்புல்பே பிரதேச சபையின் பொதுமக்கள் புத்தகசாலை சூழலுக்குள்ளோ அல்லது அதை சூழவோ தகாத முறையில் நடந்து கொள்ளல் அது போன்ற தீங்குகளை செய்தல் கூடாது ;

(ii) புத்தகசாலையிலோ அல்லது அதை சூழவோ பிரதேச சபையின் ஏதேனுமொரு கட்டிடத்திற்கோ, பகுதிக்கோ அல்லது வளங்களுக்கோ தீங்கு செய்தலோ அல்லது அவற்றை அழித்தலோ செய்ய கூடாது;

(iii) புத்தகசாலை திறந்து வைக்கப்பட்டுள்ள நேரத்திற்கு பின் புத்தகசாலை சூழலுக்குள் இருத்தலோ அல்லது அநாவசிய நடவடிக்கை மேற்கொள்ளவோ கூடாது;

(iv) புத்தகசாலை சூழலில் மது பாவனை, புகைப்பிடித்தலோ அல்லது எச்சில் துப்பவோ கூடாது;

(v) புத்தகசாலை சூழலில் தாயக் கட்டைகளிலோ அல்லது காட் கூட்டங்களின் மூலமோ சூதாட்டம் ஆடக் கூடாது;

(vi) புத்தகசாலை சூழலில் சத்தமிடலோ, பாடல் பாடுதலோ அல்லது வேறு வகையில் சத்தமிடலோ, அப்புத்தகசாலையை பாவிப்போருக்கு இடைஞ்சல் விளைவிக்கவோ கூடாது;

(vii) அசுத்தமாக பொதுமக்கள் புத்தகசாலைக்குள் செல்லக்கூடாது ;

(viii) புத்தகசாலை சூழலுக்குள் ஏதேனும் பிராணிகளை எடுத்துச்செல்லக்கூடாது ;

(ix) புத்தகசாலை சூழலுக்குள் நித்திரை செய்தலோ அல்லது போசணை செய்தலோ கூடாது ;

(x) புத்தகசாலை அதிகாரிக்கோ அல்லது புத்தகசாலை அதிகாரிக்கு கீழாக கடமை புரியும் வேறு எவருக்கோ இவ் இடைக்கால சட்டதிட்டங்களுக்கு கீழ் செயற்படுபவர்கள் எவருக்கும் இடைஞ்சல் விளைவிக்கக் கூடாது;

(xi) ஏதேனுமொரு அசாதாரண அல்லது ஸ்பரிச நோயினால் பீடிக்கப்பட்ட அல்லது அண்மைக்காலமாக பீடிக்கப்பட்ட அல்லது அந்நோயினால் பீடிக்கப்பட்ட யாரேனுமொரு நபருக்கு அண்மைக்காலமாக சேவை செய்தவர் நோய் பரவும் கால எல்லை முடியும் வரை இப்பொதுமக்கள் புத்தகசாலை சூழலுக்குள் வருகை தரக் கூடாது;

(xii) புத்தகசாலைக்குள் நடமாடும் தொலைபேசி பாவனை செய்தல் தடைசெய்யப்பட்டுள்ளது. புத்தகசாலைக்குள் நடமாடும் தொலைபெசி எடுத்துவருவதாயின் அதன் செயற்பாட்டை நிறுத்தி வைக்க வேண்டும்.

23. வெளியே கொடுத்தல் பிரிவு தவிர்ந்த விமர்சன பிரிவு மற்றும் ஏனைய பிரிவுகள் பரிபாலனம் தொடர்பாக சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ள இவ் இடைக்கால சட்டதிட்டங்களில் 2 ஆவது உப பிரிவின் கட்டணமானது புத்தகசாலை அங்கத்தவர் அல்லாதவர்களிடம் வசூலிக்கப்படும். இக்கட்டணமானது நிர்வாக சபையின் நிர்ணயித்தல் மூலம் இடைக்கிடை மேற்கொள்ளப்படும் சபையின் தீர்மானத்தின்படி மீள்பரிசீலனை செய்யப்படும்;

24. வருடாந்த தொகை மதிப்பீடு

(i) புத்தகசாலை தொடர்பில் வருடாந்தம் தொகை மதிப்பீட்டை மேற்கொள்ளுதல் பிரதேச சபைச் செயலாளரின் பொறுப்பாகும்;

(ii) வருடாந்த மொத்த பரிசீலனை அறிக்கை சபையில் முன்வைக்க வேண்டும் ;

(iii) சபையினால் அனுமதி பெறப்பட்ட நிர்ணயித்தல் சபை வழங்கும் திகதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் செயற்படுத்தப்பட வேண்டும்.

25. இவ் இடைக்கால சட்டதிட்டங்களை தவிர்க்கும் பட்சத்தில் வித விதமான திருத்தங்களை மேற்கொள்ளுதல் தொடர்பாக பலம் உடைய நீதிமன்றத்தினால் குற்றவாளி கிடைக்கப்பெறும் இடத்து இதை தவிர்க்காது திருத்தம் மேலும் உடையாமல் செல்லும் அனைத்து நாட்கள் தொடர்பாகவும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122 (2) ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி தண்டனைக்கு அடிபணிய வேண்டும்.

**26. தகவல் விளக்கப்பாடு**

(i) "புத்தகசாலை அதிகாரி" என கூறப்படுபவர் புத்தகசாலை பொறுப்பாளராக இருப்பதற்கு பிரதேச சபையினால் நியமிக்கப்படும் நபராவதோடு அவரின் உதவியாளரும் உள்ளடங்க வேண்டும்;

(ii) "மக்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்" எனப்படுபவர் மாகாண பரிபாலன ஆணையாளரினால் பிரதேச சபையின் மக்கள் அபிவிருத்திக்காக நியமிக்கப்படும் அதிகாரியாக கருதப்படும்;

(iii) "சபை" எனப்படுவது இம்புல்பே பிரதேச சபை என கருதப்படும்;

(iv) "நிர்வாக சபை" எனப்படுவது புத்தகசாலை ஆலோசனை நிர்வாக சபையாகும்;

(v) "விசேடமான நபர்" எனப்படுபவர் இம்புல்பே பிரதேச சபைக்கு உரிய பிரதேசத்தில் வாழும் புகழ் மிக்க வெளித் தெரியும் சமூக சேவைகள் செய்யும் நன்கு படித்த புத்திசாதூர்யம் நிறைந்த நபராக கருதப்படுவார்.

27. இவ் இடைக்கால சட்டதிட்டத்தின் சிங்கள/தமிழ்/ஆங்கில மொழி பிரதியில் ஏதேனும் நிச்சயத்தன்மைக்கு சிங்கள பிரதியே பலமிக்கதாகும்.

2-303

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.